‘தமிழன்’ பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.



Follow us:

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 229 சோபகிருது வருடம், சித்திரை மாதம் 27ஆம் திகதி புதன்கிழமை
(10.05.2023) ஹிஜ்ரி 1444, ஷவ்வால் - 19, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50


## இம்ரான் கான் கைது



10 பக்கம்

## கோதுமை மா விலையில் மாற்றமில்லை

### அரசாங்கம் அறிவிப்பு



தேசிய ரீதியில் உற்பத்தி செய்யப்படும் கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்படவில்லை என்றும் எதிர்வரும் ஆறு மாதங்களுக்குத் தேவையான கோதுமை மா இருப்பிலுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட இரு நிறுவனங்களும் அறிவித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (09) இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

02 பக்கம்



இனப்படுகொலையை நினைவுகூர்ந்து யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு வல்வெட்டித்துறை, ஆலடிச் சந்தியில் நேற்று (09) காலை ஆரம்பிக்கப்பட்டது.
(படப்பிடிப்பு: யாழ். செய்தியாளர்)

## ‘எக்ஸ்பிரஸ் பேர்ள்’ இன்றும் நாளையும் சபையில் விவாதம்



03 பக்கம்

## கடன் வசதியை நீடித்தது இந்தியா



இலங்கைக்கான ஒரு பில்லியன் டொலர் கடன் வசதியை இந்தியா ஒரு வருடத்துக்கு நீடித்துள்ளது. பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அத்தியாவசிய இறக்குமதிகளுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படுமென நிதி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கை கடந்த ஆண்டின் முற்பகுதியில் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைக்கு முகங்கொடுத்திருந்தவேளை இந்தியாவால் வழங்கப்பட்ட...

02 பக்கம்

## ஜனாதிபதியின் நலன்புரி கொடுப்பனவுகள் ஜூலை முதல்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கமைய முன்னெடுக்கப்படும் ‘அஸ்வெசும’ (ஆறுதல்) நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு வழங்கும் பணிகள் ஜூலை 01 முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அதிகாரங்களுக்கமைய இதற்கான வர்த்தமானி அறிவித்தல் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இடைநிலை, பாதிக்கப்படக்கூடிய, வறிய மற்றும் மிகவும் வறுமையான குடும்பங்களுக்கு 04 பிரிவுகளின் கீழ் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளதோடு, அங்கவீன மானவர்கள், முதியவர்கள் மற்றும் சிறுநீரக...

02 பக்கம்

# ரணில் - சம்பந்தன் பேச்சில் முன்னேற்றம்!

## வடக்கு, கிழக்கு தமிழ் எம்.பிக்களை ஒரேநேரத்தில் சந்திக்க ஜனாதிபதி இணக்கம்

•நமது விசேட செய்தியாளர்

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நாளை வியாழக்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் நடக்கவுள்ள சந்திப்புகளில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் தமிழ் எம்.பிக்களை ஒரே நேரத்தில் சந்திக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இணக்கம் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையிலான குழுவுடன் நேற்று (09) பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடந்த சந்திப்பின்போது ஜனாதிபதி தரப்பில் இந்த இணக்கம் வெளியிடப்பட்டது.

கிழக்கு மாகாண எம்.பிக்களை அழைக்காமல் வடக்கு மாகாண எம்.பிக்களை மாத்திரம் ஜனாதிபதி சந்திப்பதற்கு முன்னர் ஏற்பாடாகியிருந்தது. ஆனால், நேற்றைய சந்திப்பில் இதுவிடயம் பிரஸ்தாபிக் கப்பட்டதையடுத்து அந்த முடிவை மாற்றியுள்ளார் ஜனாதிபதி.

நேற்றைய சந்திப்பில் தமிழர்களின் உடனடிப் பிரச்சினைகள் குறித்து விளக்கமளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சுகள் நிகழ்ச்சி நிரல் அடிப்படையில் இடம்பெறவேண்டுமெனவும் வலியுறுத்தினார்.

இதற்கமைய நாளை வியாழக்கிழமை நல்லிணக்கம் மற்றும் உடனடி பிரச்சினைகளை ஆராய்வதற்கும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அதிகாரப்பகிர்வு பற்றி பேசுவதற்கும்...

02 பக்கம்

## அரச பதவிகளை ஏற்கக் கூடாது

### ஐ.ம.ச. செயற்குழுவில் ஏகோபித்த தீர்மானம்



ஜனநாயகத்தை மீறி செயற்பட் டுவரும் அடக்குமுறை அரசாங் கத்தில் சேரக்கூடாது என்றும் பதவிகளை ஏற்கக் கூடாது என்றும் நேற்றுமுன்தினம் (08) இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

ஏதேனும் ஒருவகையில், இத்தகைய அடக்குமுறை அரசாங்கத்துடன் இணைவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்துவதோ அல்லது முன்மொழிவுகளை முன்வைப்பதோ மக்களின் பெயரால் செய்யப்படும் மாபெரும் தவறாகும் என்பதனால், அவ்வாறானதொரு முன்னெடுப்பை மேற்கொள்ளாதிருக்கவும் அவ்வாறு செய்வது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் செயற்குழு ஏகமனதாக முடிவு செய்தது.

எவ்வாறாயினும், நாட்டுக்கு பயனளிக்கும் முற்போக்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிப்பதில் ஒரு கட்சியாக கூடி முடிவுகள் எட்டப்படும்.

» 02 பக்கம்

## தமிழர் பூர்வீக நிலங்களை பறிக்கும் இனவாத அரசு

### காணி அபகரிப்பை சபையில் அறிக்கையிட்டு சிறீதரன் உரை



வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பூர்வீக நிலங்களை திட்டமிட்ட வகையில் இனவாத அரசாங்கம் பறிப்பதாக குற்றஞ்சுமத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அவ்வாறான நடவடிக்கைகள் நிறுத்தப்பட வேண்டுமென வலியுறுத்தியதுடன், காணி அபகரிப்பு தொடர்பில் அறிக்கையொன்றையும் சமர்ப்பித்தார்.

02 பக்கம்

## வன்முறைகளைத் தடுப்பதற்கு அதிகாரமுடைய ஆணைக்குழு

### ஜனாதிபதியிடம் கோரினர் அமைச்சரவை அமைச்சர்கள்

•நா.தினுஷா

வன்முறைகளுக்கு இடமளிக்காமல் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக முழுமையான அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை நியமிக்குமாறு அமைச்சரவை அமைச்சர்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் (08) இடம் பெற்ற அமைச்சரவை கூட்டத்தின்போதே இந்த கோரிக்கை முன்வைக்கப்பட்டதாக அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (09) இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும்...

02 பக்கம்

## கமெண்ட் கந்தர்...




## ஆஸியிலிருந்து 41 பேர் நாடு கடத்தப்பட்டனர்

### கட்டுநாயக்க விமான நிலையத்தில் தீவிர விசாரணை



சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்குள் நுழைய முற்பட்ட போது, அந்நாட்டு பாதுகாப்புப் படையினரால் கைதுசெய்யப்பட்டு கிறிஸ்மஸ் தீவில் தங்க வைக்கப்பட்டிருந்த 41 இலங்கையர்கள், அங்கிருந்து நாடு கடத்தப்பட்டு நேற்று (09) விசேட விமானம்மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

02 பக்கம்

### களுத்துறையில் மாணவி உயிரிழப்பு

## பிரதான சந்தேகநபர் ஹிக்கடுவையில் கைது



•லகித்த வித்தியாசேகர, பி.ஜயசிங்க

களுத்துறையில் 16 வயதான பாடசாலை மாணவியொருவர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த பிரதான சந்தேக நபர் ஹிக்கடுவையில் நேற்று (09) பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சந்தேக நபர் காலி பகுதியில் இருப்பதாக களுத்துறை பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் ருவன்...

02 பக்கம்

## உஷ்



பதவியை இராஜினாமா செய்யுமாறு உத்தரவு பெறப்பட்ட மாகாண ஆளுநர்கள் சிலர் உயர்மட்ட பௌத்த பிக்குமாரை சந்தித்து பதவிகளில் நீடித்துநிற்க உதவுமாறு கோரிக்கை விடுத்தனராம்.

ஆனால், இந்த விடயத்தில் ஜனாதிபதியுடன் பேச அவர்கள் எவரும் முன்வரவில்லையாம்.

முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சிலர் இந்த விடயத்தில் நாடினராம். ஆனால், அவரும் ரணிலின் முடிவே இறுதி முடிவென கையை விரித்துவிட்டாராம்.

## வன்முறைகளைத்...

செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மே 09ஆம் திகதியென்பது உலக வரலாற்றில் கறுப்பு கறைப்படிந்த தினமாகும். வன்முறைகள் இடம்பெற்று ஒரு வருடம் நிறைவடைகின்றது. சட்டவாக்கம், நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித் துறை என்பன ஜனநாயகத்தை மேம்படுத்தும் சமூக அமைப்பின் முக்கிய தூண்கள் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பொதுவான கருத்தாகும்.

பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளும் நாடுகள் அதனை உயர்ந்த நிறுவன கட்டமைப்பாக கருதுகின்றன.

ஆனால், கடந்த வருடம் அவ்வாறான பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதியொருவர் கொலை செய்யப்பட்டது மாத்திரமல்லாமல், 12 மணிநேரம் நிறைவடைவதற்கு முன்னர் அவர்களின் சொத்துகளை அழித்தார்கள்.

அது மாத்திரமன்றி, 48 மணிநேரத்தில் ஏனைய மாவட்ட ரீதியான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அச்சுறுத்தல் விடுத்தார்கள். இதுபோன்ற அநீதி உலக வரலாற்றில் ஒருபோதும் இடம்பெறவில்லை.

எனவே, எதிர்காலத்திலும் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெற்றால் அது நாட்டில் மேலும் அச்ச சூழ்நிலையை உருவாக்கும்.

அதன் காரணமாக, இந்த ஜனநாயகத்துக்கு எதிரான வன்முறைகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்காத வகையில், தாம் விரும்பிய சமயத்தையும் அரசியல் நிலைமையையும் உருவாக்குவதற்காகவும் கலாசாரத்தை பின்பற்றுவதற்கும் மனிதனுக்கு இருக்கும் உரிமை உள்ளிட்ட அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடமாடும் உரிமை, சுதந்திரமாக வாழும் உரிமை உள்ளிட்ட மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையிலான முழுமையான அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமிக்குமாறு ஜனாதிபதியிடம் கோரியுள்ளோம் என்றார்.

## அரச பதவிகளை...

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி சார்பாக கட்டாயம் வேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என செயற்குழு ஏகமனதாக தீர்மானித்தது. அவரது வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில், ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான பரந்த கூட்டணியை உருவாக்க செயற்பட வேண்டும் என்றும், அந்தக் கூட்டமைப்பைக் கட்டியெழுப்புவதற்கு கட்சியின் தலைவர் என்ற வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு பூரண அதிகாரம் வழங்குவதற்கு செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்தது.

கட்சியின் செயற்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்படும் எந்தவொரு நபருக்கும் எதிராக கட்சியின் யாப்பின் பிரகாரம் தேவையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு செயற்குழு மூலம் அதிகாரம் வழங்கப்பட்டது.

## கடன் வசதியை...

04 பில்லியன் டொலர் நிதியுதவியின் ஒரு பகுதி கடன் இவ்வருட மார்ச் மாதத்துடன் நிறைவடைகிறது. அந்தக் கடன் செலுத்துகைக்கான காலமே எதிர்வரும் 2024ஆம் ஆண்டு மார்ச் வரை நீடிக்கப்பட்டுள்ளதாக திறைசேரியின் பிரதி செயலாளர் பிரியந்த ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்திய கடன் வசதியளிப்பு திட்டத்தின்கீழ் 350 மில்லியன் டொலர் மீதமுள்ளதாகவும் அதனை அவசர தேவைக்கு பயன்படுத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழர் பூர்வீக நிலங்களை...

பாராளுமன்றத்தில் நேற்று (09) உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு, கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீக நிலங்களை அதிகாரக் கரங்களினால் வலிந்து பறித்தெடுத்து, அந்நிலங்களில் பௌத்த விகாரைகள் அமைத்தல், இராணுவ முகாம்களை கட்டமைத்தல், சிங்களக் குடியேற்றங்களை உருவாக்குதல், சீனா உள்ளிட்ட நாடுகளின் வர்த்தக நடவடிக்கைகளுக்காக அவற்றை வழங்குதல் ஆகியன இடம்பெறுகின்றன.

இவற்றின் ஊடாக, தமிழ்மக்களின் குடிப்பரம்பலை அடியோடு அழிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் தொடர்ந்தும் முன்னெடுப்பதை சிங்கள இனவாத அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றார்.

இதேவேளை, அண்மைக் காலங்களில் இலங்கை தொல்பொருளியல் திணைக்களத்தால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 37 இடங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ள இன, மத ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் குறித்து, தன்னால் தயாரிக்கப்பட்ட விவரண அறிக்கை ஒன்றை சபாபீடத்துக்கு சமர்ப்பித்தார்.

## கோதுமை மா விலையில்...

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோதுமை மா விலை குறித்து தவறான கருத்து வெளியிடப்படுகிறது.

நாட்டுக்கு தேவையான ஒட்டுமொத்த கோதுமை மா தேவையையும் எமது நாட்டில் இருக்கும் பிரதான இரு நிறுவனங்களுமே நிவர்த்தி செய்து வருகின்றன.

இருந்தபோதும் கடந்த காலங்களில் விநியோக கட்டமைப்பு பாதிப்புக்குள்ளானதால் இறக்குமதி செய்யும் வாய்ப்பு வழங்கப்பட்டிருந்தது. இறக்குமதி செயற்பாடுகளுக்காகவே தீர்வை வரி விதிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ஒரு கிலோ கோதுமை மாவின் விலை 10ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியிடப்படுகின்றன.

இந்நிலையில், கோதுமை மாவின் விலை ஒரு சதம் கூட அதிகரிக்கப்படவில்லை என்று அந்த இரு நிறுவனங்களும் அறிவித்துள்ளன. மேலும், எதிர்வரும் ஆறு மாதங்களுக்கு தேவையான கோதுமை மா நாட்டில் இருப்பில் இருப்பதாகவும் அந்த நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

எனவே, இறக்குமதி செய்யப்படும் கோதுமை மாவின் விலையே அதிகரிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி விலை அதிகரிக்கப்படும்போது பொருட்களின் விலை அதிகரிப்பது பொதுவான விடயமாகும் என்றார்.

## ஆஸியிலிருந்து 41 பேர்...

அவுஸ்திரேலியாவுக்குச் சொந்தமான ASY-013 விமானத்தில் அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் இருந்து தமது பயணத்தை ஆரம்பித்த இவர்கள் நேற்றுக் காலை 09.40 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணம் மற்றும் வாழைச்சேனை பிரதேசங்களில் வசிப்பவர்கள் எனவும், இவர்கள் பல நாள் மீன்பிடி படகுகள் மூலம் கடல் கடந்து அவுஸ்திரேலியா சென்றுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இந்தக் குழுவை வரவேற்பதற்காக இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் மூன்று சிரேஷ்ட அதிகாரிகளும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

நாடு கடத்தப்பட்ட இலங்கையர்களுடன், அதே விமானத்தில் பெரும் எண்ணிக்கையிலான பாதுகாப்பு அதிகாரிகளும் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வந்திருந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலய அதிகாரிகள் மற்றும் அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் இணைந்து குடிவரவு திணைக்கள அதிகாரிகளிடம் குழுவை கையளித்துள்ளனர்.

இந்த நபர்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலங்களை பதிவு செய்த பின்னர் நீர்கொழும்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.






# வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்ட நபரும் உதவிசெய்த சிறுவனும் கைது

## கொக்குவில் பொலிஸார் அதிரடி நடவடிக்கை; பொருட்களை வாங்கிய வர்த்தகர்களும் சிக்கினர்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு கொக்குவில் மற்றும் மட்டு தலைமையக பொலிஸ் பிரிவுகளிலுள்ள பிரதேசத்தில் பூட்டியிருந்த 6 வீடுகளை உடைத்து அங்கிருந்து பணம் தங்க நகைகள், மடிக் கணினி மற்றும் மின் உபகரணங்களை திருடிவந்த 14 வயது சிறுவனும் மற்றொரு நபரும் திருட்டுப் பொருட்களை வாங்கிய 6 பேரும் நேற்று முன்தினம் (08) கைது செய்துள்ளதுடன் திருடப்பட்ட பொருட்களை மீட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் பொலிஸ் பிரிவிலுள்ள பனிச்சையடி பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி தொடக்கம் 04 ஆம் திகதிவரை அந்த பிரதேசத்தில் தொடர்ச்சியாக பூட்டியிருந்த 04 வீடுகளின் கூரை மற்றும் யன்னல் கதவுகளை உடைத்து அங்கிருந்த 04 மடிக்கணினி, கையடக்கத் தொலைபேசிகள், தங்க ஆபரணங்கள் மற்றும் பெறுமதியான மின்சார உபகரணங்கள் திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக கொக்குவில் பொலிஸ் நிலைய பெரும் குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் பி.சசீந்திராவுக்கு கிடைத்த தகவலையடுத்து பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ.கே.யு.பி. விமலரத்தினவின் ஆலோசனைக்கமைய 14 வயது சிறுவன் மற்றும் 25 வயதுடைய நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் மேற் கொண்ட விசாரணையில் குறித்த நான்கு வீட்டை உடைத்து திருடியதுடன் மட்டக்களப்பு நகர் கண்ணகையம்மன் ஏழாம் குறுக்கு வீதியிலுள்ள பூட்டியிருந்த வீடு ஒன்றை கடந்த 05ஆம் திகதி உடைத்து அங்கிருந்து ஒரு பவுண் தங்கச் சங்கிலி, 3 தோடுகள், கையடக்கத் தொலைபேசிகள் திருடியதுடன் பார் வீதியிலுள்ள வீடு ஒன்றில் இருந்து மரம்வெட்டும் மின்சார உபகரணம் உள்ளிட்டவற்றை திருடியதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து திருடப்பட்ட பொருட்களை மீட்டதுடன் அவற்றை வாங்கிய காத்தான்குடி, சத்துருக்கொண்டான், கொக்குவில் பிரதேசங்களைச் சேர்ந்த வர்த்தகர்கள் 4 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தியபோது திருட்டில் ஈடுபட்ட 14 வயது சிறுவன் உட்பட 2 பேரையும் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன் ஏனைய நால்வரை பிணையில் விடுவித்தார்.




கிண்ணியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட காக்கமுனை, மயில்தீவு கிராமத்தில் நேற்று நண்பகல் வீசிய சூறாவளியால் எட்டு வீடுகளின் கூரைகள் சேதமடைந்தன. (படப்பிடிப்பு: சீனக்குடா செய்தியாளர்)

## ரணில் - சம்பந்தன்...

நேற்றைய சந்திப்பில் இணக்கம் காணப்பட்டது. இந்த பேச்சுகளின் முன்னேற்றத்தை அடிப்படையாகக் கொண்டு சனிக்கிழமையும் தொடர் பேச்சு நடத்துவதா என்பது பற்றி தீர்மானிக்கப்படவுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி பற்றி சனிக்கிழமை பேசலாமென உத்தேசிக்கப்பட்டது.

வடக்கும் கிழக்கும் தமிழ் மக்களினதும் தமிழ்ப் பேசும் மக்களினதும் சரித்திரபூர்வமான வாழ்விடங்கள் என்ற அடிப்படை சர்வதேச ரீதியாகவும் நாட்டுக்குள்ளேயும் இந்திய-இலங்கை ஒப்பந்தத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஒரே அலகாக உருவாக்கப்பட்டது. அந்த அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டுமென நேற்றைய சந்திப்பில் தமிழ்த் தரப்பில் வலியுறுத்தப்பட்டது.

இந்த சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், எம்.பிக்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறீதரன், இரா. சாணக்கியன், சார்ள்ஸ் நிர்மலநாதன், த.கலையரசன், தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதியுடன் அவரது செயலாளர் சமன் ஏக்கநாயக்க, வடக்கு மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் எம். இளங்கோவன் ஆகியோர் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

## ஜனாதிபதியின் நலன்புரி...

நோயாளர்கள் ஆகியோருக்கும் 'அஸ்வெசும' திட்டத்தின் கீழ் நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

அதற்கமைய, தற்காலிக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்திருக்கும் 400,000 பேருக்கான 2500ரூபா மாதாந்த கொடுப்பனவு 2023 டிசம்பர் 31 வரையிலும் வழங்கப்பட இருப்பதோடு பாதிக்கப்படக்கூடிய 400,000 பேருக்கான 5000 ரூபா கொடுப்பனவு 2024 ஜூலை 31 வரையிலும் வழங்கப்படவுள்ளது. மேலும் வறியோர் என்று அறியப்பட்ட பயனாளிகள் 800,000 பேருக்கான 8500 ரூபா கொடுப்பனவும் மிக வறுமையானவர்களுக்காக மாதாந்தம் 15,000 ரூபா கொடுப்பனவும் 2023 ஜூலை 01 முதல் மூன்று வருட காலத்துக்கு வழங்கப்படவுள்ளன.

தற்போது நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ளும் 72,000 மாற்றுத்திறனாளிகளுக்கு மாதாந்தம் 5000ரூபா வீதமும் சிறுநீரக பாதிப்புக்கான நிவாரணங்களை பெறும் 39,150 பேருக்கு 5000ரூபா வீதமும் முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெறும் 416,667 பேருக்கு 2000ரூபா என்ற அடிப்படையிலும் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்வதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள 340 பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்து 3,712,096 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த நலன்புரி நன்மைகள் கொடுப்பனவு திட்டத்துக்கு தகுதியானவர்களை கண்டறிவதற்கான திட்டத்தில் தகவல்களை சரிபார்க்கும் பணிகளில் 91.5 சதவீதம் நேற்று முன்தினம் (08) நிறைவடைந்திருந்தது.

பிரதேச செயலாளர் பிரிவுகளில் மூவர் அடங்கிய தெரிவுக்குழு ஒன்றின் கீழ் தகவல்கள் பரிசீலிக்கப்பட்டு மாவட்டச் செயலாளரின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான வேலைத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதுவரையில் தகவல்கள் உறுதிபடுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்களில் அதிகளவானவை வவுனியா மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளதோடு அம் மாவட்டத்திலிருந்து 98.08 சதவீதமானவர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

அடுத்தபடியாக கண்டியிலிருந்து 96.05 வீதம், கிளிநொச்சியிலிருந்து 96வீதம், யாழ்ப்பாணத்திலிருந்து 96 வீதம், திருகோணமலையிலிருந்து 95.5 வீத விண்ணப்பங்களும் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் நாடளாவிய ரீதியில் 3,362,040 விண்ணப்பங்கள் தொடர்பிலான தகவல்களை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டங்கள் தற்போது வரையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

## களுத்துறையில் மாணவி...

விஜேசிங்கவுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி தம்மிக சில்வா தலைமையிலான குழு விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டது.

அதன் பிரகாரம் 29 வயதான சந்தேக நபர் கைதுசெய்யப்பட்டார். களுத்துறை இசுறு உயன பகுதியைச் சேர்ந்த தனுஷ்க கயான் சஹபந்து என்ற இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டவரென பொலிஸார் தெரிவித்தனர்.

களுத்துறையில் ஹோட்டல் ஒன்றுக்கு அருகிலிருந்து 16 வயதான சிறுமியின் சடலம் மீட்கப்பட்டமை தொடர்பில் மூவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுமியின் மரணம் தொடர்பில் அவருடன் ஹோட்டலுக்கு வருகை தந்த தம்பதியினரும் பிரதான சந்தேக நபரின் நண்பரான வாகன சாரதியொருவரும் கைதுசெய்யப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

அவர்களை எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

குறித்த மாணவி கடந்த 06ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் மேலும் இரு இளைஞர்கள் மற்றும் யுவதியொருவருடன் களுத்துறை பிரதேசத்திலுள்ள ஹோட்டலொன்றுக்கு சென்றுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அதன் பின்னர் அவர்கள் அவர்களின் தேசிய அடையாள அட்டையை வழங்கி, குறித்த ஹோட்டலில் இரண்டு அறைகளை ஒதுக்கிக் கொண்டுள்ளனர். அவ்வாறு, இரு அறைகளை ஒதுக்கிக்கொண்டு அங்கு சென்றிருந்தாலும் நால்வரும் ஒரே அறையிலிருந்து மதுபானம் அருந்தியதை ஹோட்டல் சேவையாளர் ஒருவர் கண்காணித்துள்ளார்.

அதன் பின்னர் அவர்களில் இளைஞரொருவரும் யுவதியும் ஹோட்டலிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளனர். அதன் பின்னர், 20 நிமிடங்கள் கழித்து மற்றைய இளைஞரும் குழப்பத்தில் ஹோட்டலிலிருந்து வெளியேறியதை பணியாளர்கள் அவதானித்துள்ளார்கள்.

அதன் பின்னர் ஹோட்டலுக்கு உணவு கொள்வனவு செய்வதற்காக வந்த நபரொருவர், ஹோட்டலுக்கு அண்மையிலுள்ள புகையிரத வீதியில் பெண்ணொருவர் நிர்வாணமாக வீழ்ந்து கிடப்பதாக ஹோட்டல் பணியாளருக்கு அறிவித்திருக்கிறார்கள். அதுதொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், அதனை தொடர்ந்து பொலிஸ் அதிகாரிகள் சம்பவ இடத்தை பரிசோதனைக்குட்படுத்தியுள்ளதுடன் குறித்த மாணவி அதன்போது உயிரிழந்திருந்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

களுத்துறை, நாகொட பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலையொன்றில் 11ஆம் தரத்தில் கல்வி கற்ற 16 வயது மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மேலும், உயிரிழந்த மாணவி ஹோட்டலுக்குள் செல்வதற்கு வயது தடையாக இருந்ததால் இன்னுமொருவரின் அடையாள அட்டையை காண்பித்தே ஹோட்டலுக்குள் சென்றுள்ளார் என்பது பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளதுடன், இதனுடன் தொடர்புடைய மேலும் சில காரணங்களை உறுதிப்படுத்திக் கொண்டுள்ளனர்.

திடீர் குழப்பத்துடன் ஹோட்டல் அறையிலிருந்து வெளியேறிய இளைஞர், அவருக்கு முன்னர் அங்கிருந்து வெளியேறி இளைஞருக்கும், யுவதிக்கும் அவசரம் என்று கூறி அவர்களை அங்கு அழைத்துவிட்டே வெளியேறியிருக்கிறார்.

உயிரிழந்த மாணவி குறித்த ஹோட்டலின் மூன்றாவது மாடியிலிருந்து புகையிரத வீதிக்கு பாய்ந்ததாகவும் அதன் பின்னர் தான் அங்கிருந்து காரில் தப்பித்துச் சென்றுவிட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பின்னர் மற்றைய இளைஞரும் யுவதியும் புகையிரத வீதியில் விழுந்திருந்த மாணவியை அந்த வீதியிலிருந்து ஒதுக்கிவிட்டு, அங்கிருந்து வெளியேறியுள்ளதுடன் பின்னர் இரவு 9.30 மணியளவில் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர்.

இறுதிநேரம்வரை உயிரிழந்த மாணவியின் அருகில் இருந்துவிட்டு தப்பிச் சென்ற சந்தேகநபரை கைதுசெய்வதற்கான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்திருந்த நிலையிலேயே நேற்றைய தினம் அவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடையவரா என்பது தொடர்பிலும் அவரிடமிருந்து மீட்கப்பட்டதாகக் கூறப்படும் ஒருதொகை பணம் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதம் இன்று

## மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டை வேறொரு தினத்தில் முன்னெடுக்க தீர்மானம்





பாராளுமன்றத்தில் நாளை வியாழக்கிழமை (11) விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவிருந்த இலங்கை மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாவது மதிப்பீட்டுக்குப் பதிலாக 'எக்ஸ்பிரஸ் பேர்ள்' கப்பல் விபத்து தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தை இரண்டாவது தினத்திலும் முன்னெடுப்பதற்கு நேற்று (09) இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக்க தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (09)இடம்பெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவிலேயே இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கமைய இன்றும் (10) நாளையும் (11) காலை 9.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

அத்துடன், நாளை மறுதினம் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் 2328/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 'அஷ்வசும' நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பான விவாதம் இடம்பெறவுள்ளதாகவும் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க மேலும் தெரிவித்தார்.

# மண்டைதீவில் 85 கிலோ கேரள கஞ்சா மீட்பு





யாழ்ப்பாணம், மண்டைதீவின் தென் கரையோரப் பகுதியில் நேற்று முன்தினம் (08) இலங்கை கடற்படையினர் மேற்கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போது 85 கிலோவுக்கும் அதிகமான (ஈரமான எடை) கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கடல் வழியாக மேற்கொள்ளப்படுகின்ற கடத்தல் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக தீவைச் சுற்றியுள்ள கடல் மற்றும் கடற்கரையை உள்ளடக்கி ரோந்து மற்றும் தேடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கடற்படையின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி, நேற்று முன்தினம் யாழ்ப்பாணம், மண்டைதீவின் தெற்கு கடற்கரையில், விசேட தேடுதல் நடவடிக்கையின்போது கடற்கரை பகுதிக்கு அருகிலுள்ள புதர் செடிகளில் இருந்து 03 மூடை கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. அந்த சாக்குகளில் சுமார் 85 கிலோ 450 கிராம் எடையுள்ள கேரள கஞ்சா அடைக்கப்பட்ட 22 பொதிகள் இருந்துள்ளதுடன் அவை கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்நடவடிக்கையின்போது கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்தப் பெறுமதி 28 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருப்பதாக நம்பப்படுகிறது. மேலும் குறித்த கேரள கஞ்சா பொதிகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும் வரை கடற்படை காவலில் வைக்கப்பட்டுள்ளது.

# வாள்வெட்டு குழுவைச் சேர்ந்த இருவர் மட்டக்களப்பில் கைது

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதூர் பிரதேசத்தில் வாள்வெட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையிலிருந்து சிகிச்சையின் பின்னர் வீடு சென்ற இளைஞனின் வீட்டை முற்றுகையிடச் சென்ற வாள்வெட்டுக்குழுவைச் சேர்ந்த இருவரை நேற்று முன்தினம் (08) கைதுசெய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, வாள்வெட்டு குழுவினரை தடுத்து நிறுத்த முயற்சித்த வயோதிபப் பெண் ஒருவிடம் தகாத முறையில் நடந்துகொண்டதாகவும் இந்த வாள்வெட்டு குழுவினர் மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

நான்கு பேர் கொண்ட வாள்வெட்டு குழு, கடந்த 02ஆம் திகதி அந்த பிரதேசத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனொருவன் மீது வாள்வெட்டு தாக்குதல் மேற்கொண்டிருந்தது. இதனால், படுகாயமடைந்த குறித்த இளைஞன் வைத்தியசலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சிகிச்சை நிறைவடைந்து பாதிப்புக்குள்ளான இளைஞன் நேற்று முன்தினம் வீடு திரும்பியிருந்தார். அதன்போது, இளைஞன் மீது தாக்குதல் நடத்துவதற்காக அவரின் வீட்டை வாள்வெட்டுக் குழுவினர் முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு குண்டர் குழுவினருக்கும் இளைஞனின் உறவினருக்கும் இடையே வாக்குவதம் ஏற்பட்டுள்ளது. தாக்குதலுக்குள்ளான இளைஞனின் தாயார் குண்டர் குழுவினரை வீட்டுக்குள் உள்நுழைய விடாது தடுத்து நிறுத்தியுள்ளார். அதனைத் தொடர்ந்து அந்தக் குழுவைச் சேர்ந்த நபரொருவர் அவரிடம் தகாத முறையில் செயற்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பாதிக்கப்பட்ட வயோதிபப் பெண்ணின் முறைப்பாட்டையடுத்து தலைமறைவாகியிருந்து குண்டா வாள்வெட்டு குழுவைச் சேர்ந்தவரும் ஆண் உறுப்பை காண்பித்தவர் உட்பட இருவரை நேற்று திங்கட்கிழமை இரவு பொலிஸார் கைது செய்துள்ளனர. அந்த குழுவைச் சேர்ந்த இருவர் தொடர்ந்தும் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# காரைநகரில் கஞ்சி வழங்கும் நிகழ்வு





யாழ்ப்பாணம், காரைநகர் இந்துக் கல்லூரிக்கு முன்பாக பாடசாலை மாணவர்களை மையப்படுத்தி முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் செயற்றிட்டம் நேற்று (09) மதியம் இடம்பெற்றது.

குறிப்பாக தமிழினத்தின் வலிகளை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச்செல்லும் நோக்கில் இளம் தலைமுறையான பாடசாலை மாணவர்களுக்கு எதற்காக கஞ்சி வழங்கப்படுகின்றது என்பதை எடுத்தியம்பும் துண்டுப்பிரசுரமும் வழங்கப்பட்டிருந்தது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்ப்பாணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி தயாரிக்கப்பட்டு விநியோகிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலையை நினைவுகூர்ந்து இன்று முதல் எதிர்வரும் 15ஆம் திகதிவரை வடக்கு கிழக்கு தமிழர் தாயகமெங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை வழங்க யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

# வெடி பொருட்களுடன் கைதான 07 மீனவர்களுக்கு விளக்கமறியல்

**(மன்னார் நகர் நிருபர்)**

மன்னார்- வங்காலை கடற்பரப்பில் வைத்து டைனமைட்வெடி பொருட்களுடன் கைது செய்யப்பட்ட மன்னார் பகுதியைச் சேர்ந்த 07 மீனவர்களையும் எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் நேற்று (09) உத்தரவிட்டார்.

மன்னார், வங்காலை கடற்பரப்பில் வைத்து டைனமைட் வெடி பொருட்களுடன் மன்னாரைச் சேர்ந்த 07 மீனவர்களை நேற்று முன்தினம் (08) வங்காலை பிரதேச கடற்படையினர் கைதுசெய்திருந்தனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்ட எழுவரும் மன்னார் மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ஊடாக வங்காலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இதன்போது மீனவர்களிடமிருந்து டைனமைட் வெடி பொருட்களும் மீட்கப்பட்டுள்ளன.

வங்காலை பொலிஸார் விசாரணையின் பினனர் குறித்த மீனவர்களை நேற்று மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

# பாதுக்கையில் பெண்ணொருவர் கொலை

## சந்தேகத்தின் அடிப்படையில் சகோதரனும் சகோதரியும் கைது



பாதுக்கை, வட்டரெக்க பகுதியில் உள்ள வாடகை வீடொன்றில் கட்டிட பணியாளர் ஒருவருடன் வசித்து வந்த காதல் மனைவி எனக் குறிப்பிடப்படும் பெண்ணொருவரை கொலை செய்துவிட்டு தப்பிச் சென்ற ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரனும் சகோதரியும் பொலிஸாரால் நேற்று (09) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களுள் பெண் சந்தேக நபர் குறித்த கட்டிட பணியாளரின் முன்னாள் மனைவி என்றும் மற்றையவர் அவரின் தம்பி என்றும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பெண் சந்தேகநபர் கட்டிட பணியாளரை விவாகரத்து செய்து சுமார் மூன்று வருடங்களாவதாகவும் அதனால் தான் வேறு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வந்ததாகவும் கட்டிட பணியாளர் வழங்கிய சாட்சியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுக் காலை குறித்த கட்டிட பணியாளர் வேலைக்காக வீட்டை விட்டு வெளியேறிய பின்னர் சந்தேக நபர்களான முன்னாள் மனைவியும் அவரது தம்பியும் வீட்டுக்குச் சென்று கொலையுண்ட பெண்ணிடம் பேசி, வீட்டுக்கு வெளியே அழைத்து வந்து கூரான கத்தியால் தாக்கி கொலை செய்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

வலஸ்முல்ல, கட்டுவன, அலுபொத்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த விவாகரத்துப் பெற்ற 52 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

# பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சா கலந்த போதை மாத்திரைகளை விற்றவர் கைது



பாடசாலை மாணவர்களுக்கு கஞ்சா கலந்த போதை மாத்திரைகளை விற்பனை செய்த ஒருவர் கொழும்பில் நேற்று (09) கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் விசேட அதிரடிப்படை தெரிவித்துள்ளது.கைதான சந்தேகநபருடன், கஞ்சா கலந்த 25 போதை மாத்திரைகள் மற்றும் 202 போதை மாத்திரைகள், போதைப்பொருள் விற்பனை செய்த 20 ஆயிரத்து 500 ரூபா பணம் என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

விசேட அதிரடிப்படை அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசியத் தகவலின் பிரகாரம் இந்த சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் கொழும்பு 15, அளுத் மாவத்தை வீதியில் வசிக்கும் 47 வயதுடையவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வாராந்த சமய நிகழ்வு ஆரம்பம்

**(நெல்லியடி செய்தியாளர்)**

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில், சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தி வரும் வாராந்த சைவ சமய நிகழ்வு மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

இந்நிகழ்வு பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது.

நாட்டில் கொவிட் தொற்று பரவ ஆரம்பித்ததையடுத்து இந்நிகழ்வு இடைநிறுத்தப்பட்டிருந்த நிலையிலேயே மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு வரிசையில் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை 10 மணிக்கு பக்க வாத்தியங்கள் சகிதம் இன்னிசை நிகழ்வு இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊழியர்களுக்கு 16 கோடி ரூபா மேலதிகமாக சம்பளம்

## கணக்காய்வு அலுவலகம் அறிக்கை

வீதி அபிவிருத்தி அதிகாரசபை பணியாளர்களுக்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் ஆலோசனையையும் கருத்தில் கொள்ளாமல் கடந்த 2020ஆம் ஆண்டு 16 கோடி ரூபாவுக்கும் அதிக தொகை சம்பளமாக செலுத்தப்பட்டுள்ளதாக தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அனுமதிக்கப்பட்ட சம்பளத் தொகையை விட அதிக தொகை இவ்வாறு செலுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகாமைத்துவ சேவை உத்தரவை கருத்தில் கொள்ளாமல் பணிப்பாளர் பிரிவின் தீர்மானத்துக்கமைய, பதவி உயர்வு வழங்கி அனுமதிக்காத சம்பள கொடுப்பனவு தீர்மானிக்கப்பட்டு பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, 958 பணியாளர்கள் அதிகப்படியாக இருக்கும் சந்தர்ப்பத்தில், பணியாளர்களின் சம்பளமாக 1028 கோடி ரூபா அந்த வருடத்தில் செலுத்தப்பட்டிருந்ததாகவும் அதற்காக திறைசேரியிடமிருந்து 739 கோடி ரூபா ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

அகில இலங்கை ரீதியிலுள்ள பணியாளர்கள் பிரிவுக்கு சம்பள கொடுப்பனவுக்காக 288 கோடி ரூபாவுக்கும் அதிக நிதி அந்த வருடத்தில் அதிகார சபையின் நிதியத்தினூடாக செலுத்தப்பட்டிருந்ததாக கணக்காய்வாளர் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகாரசபையின் பணிப்பாளர் பிரிவில் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல், பல்வேறு வழிமுறைகளில் பொருளாதார செயற்பாடுகளுக்காக வெளியாட்களுக்கு வட்டிக்கு கொடுத்திருந்ததாகவும் கணக்காய்வு அலுவலகம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் சித்திரை மாதம் 27ஆம் நாள் புதன்கிழமை**

**மேஷம்:** வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும். கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

**ரிஷபம்:** உடல் நோய்களால் சற்று சிரமப்படுவீர்கள். தன பொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டி வரும்.

**மிதுனம்:** சமூகத்திலும் தொழிலிடத்திலும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். உங்கள் துணைவியிடமிருந்து ஆறுதல் கிடைக்கும்.

**கடகம்:** உங்கள் பகைவர்கள் விநயமானக நடந்து கொள்வார்கள். கேட்ட இடத்திலிருந்து பணம் இன்று கிடைக்கும்.

**சிம்மம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றி வாகை சூடி சாதனைப் படைப்பீர்களா. குழந்தைகளால் மகிழ்ச்சி.

**கன்னி:** தொலை நோக்கு சிந்தையோடு இன்று வேலைகளை ஆரம்பிப்பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

**துலாம்:** பண வருவாய்க்கு குறை இருக்காது. தைரியத்தை விட மாட்டீர்கள். விடா முயற்சி வெற்றியைத் தரும்.

**விருச்சிகம்:** குடும்பத்துக்கான செலவுகளைச் செய்ய வேண்டிய கட்டாயம். ஆனாலும் சாமாளித்துக் கொள்வீர்கள்.

**தனுசு:** விருந்துபசாரங்களில் அல்லது குடும்ப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். பரிசுப் பொருள்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**மகரம்:** அதிக கோபத்தாலும் ஆணவத்தாலும் புத்தி இழந்து விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வீண் பயணம் வேண்டாம்.

**கும்பம்:** பொருள் தன வரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் லாபமும் உண்டு.

**மீனம்:** தொழில் முயற்சிகளில் வெற்றி கிட்டும், உங்கள் நண்பர்கள் மூலம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

**திதி** : பஞ்சமி பி.ப.1.49 வரை பின் ஷஷ்டி (தேய்)

**நட்சத்திரம்** : பூராடம் பி.ப.4.12 வரை பின் உத்தராடம்

**யோகம்** : சித்த யோகம் பி.ப.4.12 வரை பின் மரண யோகம்

**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : மு.ப. 8.54 – 9.54 மணி வரை

**ராகு காலம்** : 11.54 – 1.24 மணி வரை

**எமகண்டம்** : 7.24 – 8.54 மணி வரை

**குளிகை** : 10.24 – 11.54 மணி வரை

**சந்திராஷ்டமம்** : இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிஷ்டம்** : அஸ்வினி,மகம்,மூலம் (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம்** -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739


# வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, மே 10ஆம் திகதி, புதன்கிழமை

# பெற்றோரின் கவனத்திற்கு...

களுத்துறையில் ஹோட்டல் ஒன்றின் மூன்றாவது மாடியில் இருந்து விழுந்து மர்மமான முறையில் உயிரிழந்த 16 வயது பாடசாலை மாணவியின் மரணம் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. நாகொட பிரதேசத்தில் வசித்து வந்த 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் பாடசாலை மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

பொலிஸாரின் விசாரணைகளின் போது, குறித்த மாணவி மே மாதம் 06ஆம் திகதி மாலை 6.20 மணியளவில் களுத்துறை பிரதேசத்தில் உள்ள ஹோட்டல் ஒன்றிற்கு மற்றுமொரு இளைஞன் மற்றும் தம்பதியருடன் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்த மாணவி விடுதியில் அறைகளை முன்பதிவு செய்ய வயது தடையாக இருந்ததால் தனது தோழியின் அடையாள அட்டையை காண்பித்து பதிவு செய்துள்ளமையும் தெரியவந்துள்ளது. இரண்டு அறைகளை முன்பதிவு செய்த போதும் ஒரே அறையிலிருந்து இவர்கள் மது அருந்தியதை ஹோட்டல் ஊழியர் ஒருவர் பார்த்ததாக கூறப்படுகின்றது.

இதன்போது இளம் பெண் ஒருவரும், மற்றைய இளைஞனும் விடுதியை விட்டு வெளியேறியுள்ளதுடன், 20 நிமிடங்களுக்கு பின் மற்றைய இளைஞனும் பதற்றத்துடன் வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதனையடுத்து, சம்பவத்தின் பிரதான சந்தேகநபர் விடுதியில் இருந்து வெளியேறிய மற்றைய தம்பதியினரை தொடர்பு கொண்டு, மாணவி விடுதியில் இருந்து கீழே விழுந்துவிட்டதாகவும், புகையிரத கடவையிலிருந்து சடலத்தை மறைத்து விடுமாறும் அனைவரும் சிக்கலில் மாட்டிக்கொள்ளப்போகிறோம் என்று கூறியதாகவும் பொலிஸார் கூறுகின்றனர்.

அதன்படி, சடலம் விழுந்த இடத்துக்குச் சென்ற தம்பதியினர், சடலத்தை புகையிரத தண்டவாளத்திலிருந்து ஓரமாக அகற்றிவிட்டு களுத்துறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மாணவி கீழே விழுந்ததையடுத்து, சந்தேகநபர் காரில் ஹோட்டலில் இருந்து தப்பிச் சென்று அதிவேக நெடுஞ்சாலையின் களனிகம நுழைவாயிலில் காரை அங்கேயே விட்டுச் சென்றுள்ளார். இதனை தொடர்ந்து அவர் தனது நண்பருக்கு அழைப்பை ஏற்படுத்தி கார் இருக்கும் இடத்தை தெரிவித்து அதனை எடுக்குமாறு கூறியதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது. பிரதான சந்தேகநபர் நேற்று பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்டுவரும் விசாரணைகளில் உண்மை நிலைமை தெரியவரும் என்றாலும் இதில் பெற்றோருக்கும் பெரும் பாடம் ஒன்று இருப்பதை மறந்துவிடக்கூடாது . தற்காலத்தில் பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை எவ்வளவு சிரமப்பட்டு வளர்த்து படிக்கவைத்தாலும் ஒரு கட்டத்தில் பெற்றோர்கள் சொல்வதை பிள்ளைகள் பொருட்படுத்துவதில்லை. தாங்கள் எடுக்கும் தீர்மானமே சரியானது - தாங்கள் நடந்துகொள்ளும் முறைமையே ஏற்புடையது என்று கருதுகின்றனர்.

ஆனால், பிள்ளைகள் இப்படி நடக்கிறார்கள் என்பதற்காக பொறுப்புள்ள பெற்றோர் பிள்ளைகளை இப்படி விட்டுவிடக்கூடாது. ஸ்மார்ட்போன்கள் கல்வி கற்றலுக்கு உதவுமென அதனை பிள்ளைகளுக்கு வாங்கிக்கொடுக்கும் பெற்றோர் அதன் பின்னர் அதன் பயன்பாடு குறித்து எந்த அக்கறையும் கொள்வதில்லை. அதேபோல் பிள்ளைகள் கேட்பதை கேட்டபடி வாங்கிக் கொடுத்து அவர்களை கஷ்டம் தெரியாமல் வளர்ப்பதால் எதையும் செய்யலாம், அச்சப்படத் தேவையில்லை என்ற அசட்டுத் துணிச்சல் இக்கால இளைஞர் - யுவதிகளை ஆட்கொண்டு விடுகிறது. அதனால் எந்தளவு தூரமும் சென்று 'ரிஸ்க்' எடுக்கத் துணிகிறார்கள் இளையோர்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு கொடுக்கும் சுதந்திரத்தில் கண்ணாயிருத்தல் வேண்டும். இளவயதுடையோர் பக்குவமற்றவர்கள். அவர்களின் தீர்மானங்கள் சரி என்றாலும் அந்த தீர்மானத்தின் பின்னணியில் விளைவுகள் வருமா என்பதை நோக்க வேண்டிய கடமை பெற்றோருக்கு இருக்கிறதல்லவா? பிள்ளைகளை சுயமாக இயங்கவைக்க வேண்டுமென்று விரும்பும் பெற்றோர் அந்த பிள்ளைகளுக்கு ஸ்மார்போனுடனும், இணைய வசதிகளுடனும் தனியே வெளிப்பயணங்களை அனுப்பும்போது லௌகீக உலகம் அந்த இளையோரை ஆட்கொண்டு விடுகிறது. ஸ்மார்ட்போன் வைத்திருக்கும் எல்லோரும் தவறான பாதையில் போவதில்லை. ஆனால், தவறான பாதையில் சென்ற பலருக்கு ஸ்மார்ட்போனும் ஒரு ஏதுவாக அமைந்துள்ளதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

களுத்துறை யுவதியின் மரணம் முதலாவதாக நடந்த ஒன்றல்ல. இது இறுதியானதுமல்ல என்பது நிச்சயம். சில மாதங்களுக்கு முன்னர் கொழும்பு பல்கலைக்கழக மாணவி ஒருவர் கழுத்தறுக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். அந்த சம்பவத்தில் ஈடுபட்ட பல்கலை மாணவர் மனப்பிறழ்வு கொண்டவர் என்று கூறப்பட்டது. காலப்போக்கில் சட்ட ஓட்டைகளை பயன்படுத்தி அவர் நிரபராதியாகலாம். களுத்துறை சம்பவத்தின் சூத்திரதாரியும் அப்படியே விடுதலையாகும் நிலையும் ஏற்படலாம். ஆனால், இத்தனை காலமும் பிள்ளைகளை வளர்த்து ஆளாக்கிவிட்டு அவர்களின் மரணத்தையும் கண்முன்னே காணும் பெற்றோரின் நிலைமை என்ன? இதையும் இன்னொரு செய்தியாக வாசித்துவிட்டு செல்லப்போகிறோமா? சிந்திக்க வேண்டிய தருணம் வந்திருக்கிறது.பொறுப்புள்ள பிள்ளைகளும் பொறுப்புள்ள பெற்றோரும் உருவாகும் கட்டாய நிலை இப்போது ஏற்பட்டுள்ளது.

# எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் ஜனநாயக உரிமையை பேணிப்பாதுகாத்தல்!

பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைவை அரசாங்கம் தற்காலிகமாக மாத்திரமே வாபஸ் பெற்றிருக்கிறது. அந்த வரைவுக்கு திருத்தங்களை செய்வதற்கு யோசனைகளை முன்வைப்பதற்கு மேலும் கால அவகாசத்தை வழங்குவதற்கு தீர்மானித்திருப்பதாக நீதியமைச்சர் கூறியிருக்கிறார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் உயர் சமயத்தலைவர்கள் உட்பட சமூகத்தின் பரந்துபட்ட பிரிவினரிடமிருந்து வரைவுக்கு எதிர்ப்பு கிளம்பியது. பெருவாரியான அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஜனநாயக ரீதியானவை என்றும் நியாயபூர்வமானவை என்றும் உலகம் பூராவும் அங்கீகரிக்கப்படுகின்ற மக்கள் போராட்டங்களை அரசாங்கம் ஒடுக்குவதற்கு வகைசெய்யக் கூடியதாக விசாலமான அம்சங்களை வரைவு கொண்டிருப்பதே இந்த கடும் எதிர்ப்புக்கான காரணமாகும்.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க முன்னெடுக்கப்படவேண்டியிருக்கும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தக்கூடிய பாதிப்புகள் நடுத்தர வர்க்கம் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தவருக்கு இடர்ப்பாடுகளை கொடுக்கும்போது அரசாங்கத்துக்கு எதிரான போராட்டங்கள் அதிகரிக்கவே செய்யும். மக்கள் போராட்டங்களினால் தோன்றக்கூடிய நெருக்கடி நிலைவரத்தை கையாள அரசாங்கம் அதன் படைக்கல களஞ்சியத்தை தயார் செய்வது போன்று தெரிகிறது. அதில் பிரதானமான ஆயுதங்களில் ஒன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமாகும்.



அரசாங்கங்கள் அவற்றின் அதிகாரத்தையும் நிலைகளையும் பாதுகாப்பதற்கு சட்டத்தை பயன்படுத்துவதில் அல்லது சட்டத்தை மீறுவதில் நாட்டம் காட்டுவது என்பது இலங்கைக்கு மாத்திரம் பிரத்தியேகமானது அல்ல. இஸ்ரேல், பாகிஸ்தான் போன்று இலங்கையில் இருந்து கலாசார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் வேறுபட்டவையாக இருக்கும் ஏனைய நடுகளிலும் இதை காணக்கூடியதாக இருக்கிறது. அவை அந்த போக்கின் வளர்ச்சியில் வேறுபட்ட கட்டங்களில் இருக்கின்றன. இஸ்ரேல் அதில் உயர்ந்த மட்டத்தில் இருக்கிறது.

ஜனநாயகத்தை பாதுகாப்பதை பொறுத்தவரை, மக்கள் பெருமளவுக்கு நேரடியான பாத்திரத்தை வகிக்க வேண்டியிருக்கிறது போல் தோன்றுகிறது. தங்களது நல்வாழ்வு மீது அக்கறை காட்டப்படாமல் இருப்பதாக அல்லது நல்வாழ்வுக்கு பாதிப்பு ஏற்படுவதாக மக்கள் உணர்கின்ற கொந்தளிப்பான சூழ்நிலைகளில் தாங்கள் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கு, கோரிக்கைகளை முன்வைப்பதற்கு இருக்கக்கூடிய உரிமைகளை பாதுகாக்க அவர்கள் அமைதிவழியில் வீதியில் இறங்குகிறார்கள்.

பாகிஸ்தான் பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. பணவீக்கம் 45 சதவீதத்தையும் தாண்டிவிட்டது. வருடாந்தம் பத்து இலட்சத்துக்கும் அதிகமான பாகிஸ்தானியர்கள் நாட்டைவிட்டு வெளியேறுகிறார்கள்.

"ஆழமான அரசியல் துருவமய வேறுபாடுகள் மற்றும் பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையிலான இழுபறி காரணமாக உள்நாட்டு யுத்தம் ஒன்று மூளக்கூடிய ஆபத்து இருக்கிறது. இது பெரும் கவலை தருகிறது. பஞ்சாபில் மே 14 மாகாண சட்டசபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தவறினால் வீதியில் இறங்கிப்போராடவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்று முன்னாள் பிரதமர் இம்ரான் கான் விடுத்திருக்கும் எச்சரிக்கை நாட்டில் நிலைவரங்கள் நன்றாக இல்லை என்பதை காட்டுகிறது" என்று போராசிரியர் மூனிஸ் அஹ்மர் எழுதியிருக்கிறார். இலங்கையைப் போன்றே பாகிஸ்தானிலும் தேர்தல்களை நடத்துவதற்கு பணம் இல்லை என்று அந்நாட்டு அரசாங்கம் கூறுகிறது.

"பாகிஸ்தானின் வரலாற்றில் முதற்தடவையாக தேசிய மட்டத்தில் நெறிமுறையும் பண்புகளும் பாரதூரமான அளவுக்கு சீரழிவுக்கு உள்ளாகியிருக்கின்றன. அரச நிறுவனங்களின் சீர்குலைவில் இது பிரதிபலிக்கிறது. பிரதம நீதியரசரினதும் ஏனைய நீதிபதிகளினதும் உத்தரவுகளை மதித்து நடக்க பிரதமர் தவறுகிறார் என்றால், தேர்தல் ஆணைக்குழு உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு இணங்க செயற்படாமல் அரசியலமைப்பை அப்பட்டமாக மீறுகிறது என்றால் தடுத்து நிறுத்தமுடியாத அளவுக்கு நிலைவரம் சென்றுவிட்டது என்பதே அர்த்தமாகும்.

பாராளுமன்றம் உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகளுக்கு மதிப்பு அளிக்காதபோது, பொதுவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாடுகளுக்கு முரணான தங்களது நிலைப்பாடுகள் குறித்து கிஞ்சித்தும் கவலைப்படாதபோது நாட்டின் உயர்வாழ்வு நிச்சயம் ஆபத்துக்குள்ளாகிறது" என்றும் பேராசிரியர் அஹ்மர் கூறுகிறார்.

இது இலங்கையினதும் பாகிஸ்தானினதும் நிலைவரங்களில் உள்ள சமாந்தரங்களை மேலும் உணர்த்தி நிற்கிறது.

## இஸ்ரேல் போராட்டங்கள்

இஸ்ரேலில் இடம்பெறுகின்ற மக்கள் போராட்டங்கள் எனக்கு 'அரகலய'வை நினைவுபடுத்துகின்றன. அமெரிக்க யூத கமிட்டியின் அழைப்பின் பேரில் கடந்தமாதம் அந்த நாட்டுக்கு நான் விஜயம் செயதேன். நான் தங்கியிருந்த ஹோட்டலுக்கு வெளியே இளம் பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களதும் பேராசிரியர்களும் அன்றைய தினம் நடக்கவிருந்த போராட்டத்தில் பங்குபற்றுமாறு கோரும் துண்டுப்பிரசுரங்களை வீதியில் போவோர் வருவோரிடம் விநியோகித்துக் கொண்டிருந்தனர்.

இஸ்ரேல் அரசாங்கம் பாராளுமன்றப் பெரும்பான்மை பலத்தைப் பயன்படுத்தி அதற்கு அனுகூலமான முறையில் சட்டங்களை மாற்றுவதற்கு முயற்சிக்கின்றது.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகு வசீகரமும் அனுபவமும் உடைய ஒரு தலைவர். ஆனால், அவர் இப்போது நாட்டு மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்துகின்ற கொள்கைகளையும் அணுகுமுறைகளையும் கடைப்பிடிக்கும் ஒருவராக மாறியிருக்கிறார்.

நீதிமன்றங்களில் அவருக்கு எதிராக ஊழல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றன. அதனால் அவர் நீதிமன்றங்கள் தன்னை குற்றவாளியாக காணக்கூடியதாக அமைந்திருக்கும் சட்டங்களை மாற்றியமைப்பதற்கு பாராளுமன்ற பெரும்பான்மையை பயன்படுத்தியிருக்கிறார். நீதிபதிகளை நியமிப்பதற்கு தற்போது கடைப்பிடிக்கப்படும் சுயாதீனமான செயன்முறைக்கு பதிலாக அந்த நியமனங்களை செய்யும் அதிகாரங்களை அரசாங்கத்துக்கு வழங்கக்கூடியதாக சட்டத்தை மாற்றுவதற்கும் அவர் முயற்சிக்கிறார்.

நீதித்துறை சீர்திருத்த திட்டம் ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வழக்கு விசாரணையை எதிர்நோக்கும் நெதான்யாகுவுக்கும் இஸ்ரேலின் வரலாற்றில் மிகவும் கடும்போக்கான கூட்டணியாக அமைந்திருக்கும் அவரின் அரசாங்கத்தின் பங்காளிகளுக்கும் நீதிபதிகளை நியமிப்பதில் இறுதி அதிகாரத்தைக் கொடுக்கும்.

அந்தத் திட்டம் நெதான்யாகுவின் நேசக்கட்சிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பாராளுமன்றத்துக்கு நீதிமன்றங்களின் தீர்மானங்களை மாற்றியமைப்பதற்கும் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு நீதிமன்றங்களுக்கு இருக்கும் ஆற்றலை மட்டுப்படுத்துவதற்கும் அதிகாரத்தைக் கொடுக்கும். இது இலங்கையின் கடந்த வருடத்தைய நிகழ்வுப்போக்குகளை நினைவுபடுத்துவதாக அமைகிறது. உத்தேச மாற்றங்களை வர்த்தக தலைவர்கள் உட்பட இஸ்ரேலிய சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் கடுமையாக கண்டனம் செய்திருக்கிர்கள்.

இந்த திட்டம் அங்கீகரிக்கப்படுமானால் கடமைக்கு சமுகமளிக்கப்போவதில்லை என்று இஸ்ரேலிய ரிசேர்வ் படைகள் அச்சுறுத்தியிருக்கின்றன. அரசாங்க நிறுவனங்களின் அதிகாரங்களை ஒழுங்கமைக்கும் தடுப்புகள் மற்றும் சமப்படுத்தல்கள் ஏற்பாடுகள் போன்ற ஜனநாயகக் கோட்பாடுகளைப் பற்றி அக்கறைப்படாத ஓர் அரசாங்கத்துக்காக தாங்கள் சண்டையிடுவதற்கு விரும்பவில்லை என்று அந்த படைகள் கூறியிருக்கின்றன.

அரசாங்கத்தின் திட்டத்துக்கு எதிராக ஆயிரக்கணக்கான மக்கள் பெரும்பாலும் சமய சார்பற்ற, மத்தியதர வர்க்க இஸ்ரேலியர்கள் கிரமமாக ஆர்ப்பாட்டங்களில் இணைந்திருக்கிறார்கள்.

கடந்த வருடம் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்த அரசாங்கத்துக்கு எதிராக இலங்கை மக்கள் வீதிகளில் இறங்கி செய்த கிளர்ச்சியைப் போன்று கடந்த பதினெட்டு வாரங்களாக இஸ்ரேலில் போராட்டங்களை காணக்கூடியதாக இருக்கிறது. இது தங்களது அரசாங்கத்துக்கு எதிராக போராடுவதற்கு ,வீதிகளில் இறங்கமுடியும் என்று மக்கள் உணரும் ஜனநாயகத்தின் ஓர் அறிகுறியாகும். இலங்கையில் நடந்ததைப் போன்று இஸ்ரேலிய நகரங்களால் மக்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு போராட்டங்களை நடத்துகிறார்கள்.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் நெதான்யாகு அரசாங்கத்துக்கு தங்களது ஜனநாயகத்தை மலினப்படுத்தக்கூடியது என்று போராட்டக்காரர்கள் நம்பும் சட்டங்களை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் இருக்கிறது. பெரும்பான்மையின் தீர்மானங்களுக்கு எதிராகவும் கூட எதிர்ப்பை வெளிக்காட்டிப் போராடுவதற்கான உரிமை, மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச பிரகடனத்தினால் பாதுகாக்கப்படும் ஒரு அடிப்படை மனித உரிமையாகும். இந்த பிரகடனத்தில் பாகிஸ்தான், இஸ்ரேல், இலங்கை ஆகிய நாடுகள் கைச்சாத்திட்டிருக்கின்றன. இதுவரையில் இஸ்ரேலிய அரசாங்கம் எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் உரிமையை மீறவில்லை.

## சர்வதேச நெருக்குதல்

எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்கான மக்களின் ஜனநாயக உரிமைகளையும் கூட குற்றச்செயலாக்கி பயங்கரவாதத்துக்கு விசாலமான வியாக்கியானத்தைக் கொடுப்பதே பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் தொடர்பில் உள்ள பிரதான பிரச்சினையாகும். தொழிற்சங்க நடவடிக்கை உள்ளடங்கலாக மக்கள் போராட்டங்கள் அரசாங்கத்தினதும் பொருளாதாரத்தினதும் உறுதிப்பாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைவதாகக் கூறி அவற்றை பயங்கரவாதத்துக்கு சமமானவையாக்கி ஒடுக்குவதற்கான மேலதிக அதிகாரங்களை சட்டமூல வரைவு அரசாங்கத்துக்கு வழங்குகிறது.

கடந்த வருடம் 'அரகலய'வை ஒடுக்குவதற்கு அரசாங்கம் எடுத்த நிலைப்பாடு இதுவே. முறைமை மாற்றம் ஒன்றையும் நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டுவந்ததற்கு பொறுப்பான சகல தலைவர்களும் பதவிவிலகவேண்டும் என்றும் கோரிநின்ற போராட்டக்காரர்களைக் கைதுசெய்வதற்கு (பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பதிலீடு செய்ய உத்தேசிக்கின்ற ) பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்பட்டது.

ஆனால், இந்த வருடமும் நெருக்கடி தொடரும் என்றும் அது அடுத்த வருடமும் தொடர்ந்து அதற்கு அப்பாலும் செல்லும் என்றும் உலக வங்கி மிகவும் அண்மையில் மேற்கொண்ட ஆய்வு மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி வறுமையை 13.1 சதவீதத்தில் இருந்து 25 சதவீதமாக்கி இரட்டிப்பாக்கியிருக்கிறது. குடும்பங்களின் வாழ்வாதாரங்களுக்கு ஏற்படக்கூடிய பல்வேறு இடர்ப்பாடுகளின் விளைவாக அடுத்த சில வருடங்களுக்கு வறுமை 25 சதவீதத்துக்கு மேலாக நீடிக்கும் என்று உலக வங்கி கூறுகிறது. வறுமைக் குறைப்பிலும் மனித மூலதன அபிவிருத்தியிலும் பல வருடங்களாக அடையப்பெற்ற பயன்களை பொருளாதார நெருக்கடி மறுதலையாக்கியிருக்கிறது. நெருக்கடி மேலும் சுமார் 25 இலட்சம் மக்களை வறியவர்களின் அணியில் சேர்த்திருக்கிறது.

இத்தகைய சூழ்நிலையில் எதிர்வரும் மாதங்களில் மக்கள் போராட்டங்களும் தொழிற்சங்க நடவடிக்கைகளும் இடம்பெறக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

இதை எதிர்கொள்வதற்கு பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை அரசாங்கம் தயார்செய்கிறது. சடடத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் மதத்தலைவர்களின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பாதுகாப்புப் படைகளையும் பயங்கரவாத தடைச் சட்டத்தையும் பயன்படுத்தி 'அரகலய'வை ஒரு சில நாட்களுக்குள் நிர்மூலம் செய்த அரசாங்கம் பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைவை மறுசீரமைப்பதற்கு முன்வைக்கப்பட்டிருக்கும் யோசனைகளை கருத்தில் எடுப்பது சாத்தியமில்லை.

அக்கறை கொண்ட தரப்பினர் சடடமூலத்துக்கு திருத்த யோசனைகளை மே 31 வரை சமர்ப்பிக்கலாம் என்று நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ அழைத்திருக்கின்ற போதிலும் சடடத்தரணிகள் சங்கம், சிவில் சமூக அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் சமயத் தலைவர்கள் போன்ற உள்நாட்டு தரப்புகளின் யோசனைகளை அரசாங்கம் அக்கறைகாட்டி செயற்படும் என்பது சாத்தியமில்லை.

மக்களின் எதிர்ப்பு அரசாங்கத்தை பெரும் நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கும் இஸ்ரேலின் ஜனநாயக சமுதாயத்தைப் போலன்றி இலங்கையில் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. பிளஸ் பொருளாதார சலுகையை இழக்கக்கூடிய ஆபத்து போன்ற சர்வதேச நெருக்குதல்களே அரசாங்கத்தை வழிக்குக்கொண்டுவர உதவமுடியும்.



கலாநிதி
ஜெகான் பெரேரா

## நக்கல் நமசிவாயம்

ரணில் ஐயா ஆட்சிக்கு வந்த கையோடு எப்பவும் தமிழருக்குத் தீர்வு கொடுக்கோணும் எண்டுதான் பேசுவார்... அப்பதான் உலகத்திட்ட இருந்து உதவிகளை வாங்கலாம்..!



## இன்றைய நாளில்...

- 1612 – ஷாஜகான், மும்தாஜ் மகாலைத் திருமணம் புரிந்தார்.
- 1857 – சிப்பாய்க் கிளர்ச்சி: இந்தியாவில் உத்தரப் பிரதேசத்தில் மீரட் என்ற இடத்தில் சிப்பாய்கள் பிரித்தானியக் கிழக்கிந்தியக் கம்பனிக்கெதிராக கிளர்ச்சியை ஆரம்பித்தார்கள். இந்திய விடுதலைப் போராட்டம் ஆரம்பமானது.
- 1946 – ஜவஹர்லால் நேரு இந்திய தேசியக் காங்கிரஸ் கட்சியின் தலைவரானார்.
- 1946 – அமெரிக்கா முதல் தடவையாக வி-2 ஏவுகணையை வெற்றிகரமாக ஏவியது.
- 1960 – அமெரிக்காவின் 'டிரைட்டன்' புவியை கடலடியாக சுற்றி வந்த முதலாவது நீர்மூழ்கிக் கப்பல் என்ற சாதனையை நிலைநாட்டியது.

# எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரிப்பு

## ஐந்து மாதங்களில் 2,800 பேர் அடையாளம்

நடப்பாண்டில் கடந்த சில மாதங்களில் மாத்திரம் எலிக்காய்ச்சலினால் 2,800 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் காய்ச்சல் நிலைமை அல்லது எலி காய்ச்சலுக்கான அறிகுறிகள் தென்பட்டால் விரைவில் சிகிச்சைப் பெற்றுக்கொள்ளுமாறும் இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

அநேகமாக இந்தக் காய்ச்சல் பக்டீரியாவினூடாகவே பரவலடைவதாக அந்தச் சங்கத்தின் தொற்றுநோய்ப் பிரிவின் விசேட வைத்திய நிபுணர் டொக்டர் குஷானி தாபரே தெரிவித்தார்.

இதுதொடர்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்த பக்டீரியா அதிகளவு எலிகளின் உடலில் இருப்பதுடன், அதன் காரணமாக இந்த நோய் மிக விரைவாக பரவலடைகிறது. எலிகளின் கழிவுகளினால் இந்த பக்டீரியா நீரில் கலக்கலாம். இவ்வாறே, மனிதர்களின் உடம்புக்குள் லெப்ஸ்பிரோஸிஸ் என்றழைக்கப்பட்டு பக்டீரியா தாக்கத்தை ஏற்படுத்துகிறது. வயல், ஒருசில நீர்த்தன்மை கொண்ட பிரதேசங்கள், கால்வாய்கள் போன்ற இடங்களிலேயே எலிகாய்ச்சலால் பாதிப்படைந்த நோயாளர்கள் அடையாளங் காணப்படுவார்கள். மார்ச் மாதம் முதல் மே மாதம் வரையிலான காலப்பகுதியிலேயே எலிகாய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம் பேர் இனங்காணப்படுவார்கள்.

அதேபோன்று, செப்டெம்பர் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையில் இந்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படும். எமது பயிர்ச்செய்கை செயற்பாடுகள் சிறுபோகம் மற்றும் பெரும்போகம் என்பன இந்த மாதங்களில் இடம்பெறுவதாலேயே நோயின் நிலைமை அதிகரித்து காணப்படுகிறது. அதற்கமைய இந்த காலப்பகுதியில் எமக்கு அதிகளவு மழைவீழ்ச்சியும் கிடைக்கிறது. அதன் காரணமாக ஒருசில சந்தர்ப்பங்களில் வெள்ளமும் ஏற்படக்கூடும். அதன் காரணமாக இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் அதிகரித்துக் காணப்படுவார்கள்.

இந்த நோயின் பிரதான அறிகுறி காய்ச்சல் நிலைமையாகும். மாலை நேரங்களில் காய்ச்சல் நிலைமை அதிகரித்து காணப்படும். காலையில் உடல்நிலை சீராக இருந்தாலும் பகலாகும்போது காய்ச்சல் அதிகரிக்கும். அதன் பின்னர் கை, கால் வலி, தலை வலி, உணவு வெறுப்பு, வாந்தி போன்ற நோய் அறிகுறிகளுடன், கண் ஓரளவு மஞ்சள் நிறமாக மாறும். அதன் பின்னர் படிப்படியாக சிவப்பு நிறமாக மாறும்.

கண் மஞ்சள் நிறமாகவில்லை, சிவப்பு நிறமாகவில்லை என்பதால் அதனை எலிக்காய்ச்சல் இல்லை என்று கருதக்கூடாது. அதன் பின்னர் பல்வேறு சிக்கல்களை சந்தித்து நோய் நிலைமை தீவிரமடைய முடியும். அதனூடாக உயிரிழக்கவும் நேரிடலாம். எனவே விரைவாக வைத்தியசாலைக்குச் சென்று சிகிச்சைப் பெற்றுக்கொண்டால் சிக்கல் நிலைமையிலிருந்து மீண்டு உயிரை காப்பாற்றிக்கொள்ளக் கூடியதாக இருக்கும்.

நாட்டில் கடந்த 5 மாதங்களில் 2,800 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். கடந்த வருடங்களில் 6,000 – 8,000 வரையிலான நோயாளர்களே அடையாளம் காணப்பட்டார்கள். மரணங்கள் தொடர்பான பரிசோதனைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்றார்.

# வேகக்கட்டுப்பாட்டை இழந்து லொறி விபத்து



(செ.திவாகரன்)

நுவரெலியா - கண்டி பிரதான வீதியில் நுவரெலியா பம்பரகெல டொப்பாஸ் பகுதியில் குளியாப்பிட்டியிலிருந்து நுவரெலியாவுக்கு உரம் ஏற்றிச் சென்ற லொறியொன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த வீதியிலுள்ள வளைவு ஒன்றில் லொறி கட்டுப்பாட்டை இழந்து தடுப்பு வேலியையும் உடைத்துக்கொண்டு பள்ளத்தில் இருந்த தேயிலை தோட்டத்தில் விழுந்துள்ளது.

இதன்போது லொறியின் சாரதி மற்றும் அவரின் இரு உதவியாளர்கள் இருந்துள்ளனர். இருந்தபோதும், அதிர்ஷ்டவசமாக சிறு காயங்களுடன் மூவரும் உயிர்த்தப்பியுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, லொறியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக, வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் இதற்கு முன்னரும் பல விபத்துகள் ஏற்பட்டதை கருத்தில் கொண்டு அங்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை பல வீதித்தடைகளை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்விபத்து குறித்து மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கிணற்றில் விழுந்த குழந்தை உயிரிழப்பு



இளவாலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இளவாலை- வசந்துபுரம் பிரதேசத்தில் இரண்டரை வயதுக் குழந்தை ஒன்று நேற்று (09) கிணற்றினுள் விழுந்து உயிரிழந்துள்ளது.

குழந்தையின் தந்தை வேலைக்கு சென்ற நிலையில் தாயார் சமையல் செய்துகொண்டிருந்துள்ளதாகவும் இதன்போதே வீட்டுக்கு அருகிலிருந்த கிணற்றினுள் குழந்தை விழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது குழந்தை மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபோது குழந்தை ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

கருணாநிதி ரக்ஸிகா என்றழைக்கப்படும் குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளது. சடலம் தொடர்பான பிரேத பரிசோதனைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

# மாடுடன் மோதுண்டவர் அதே இடத்தில் பலி





மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர் மாடுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியில் பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

கண்டாவளைப் பகுதியில் இருந்து புளியம்பொக்கணை நோக்கி பயணித்த மோட்டார் சைக்கிளே மாடு ஒன்றுடன் மோதி இவ்விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் இளைஞன் உயிரிழந்துள்ளதுடன், மற்றுமொருவர் சிறு காயங்களுக்குள்ளானார். சம்பவ இடத்தில் குறித்த மாடும் இறந்துள்ளது.

18 வயதுடைய புளியம்பொக்கணை பகுதியைச் சேர்ந்த இளைஞனே சம்பவத்தில் பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.





**01. இலங்கை – தாய்லாந்து உத்தேச வர்த்தக ஒப்பந்தம் பற்றிய கலந்துரையாடலில் சமகால நிலைமை**

இலங்கை – தாய்லாந்து உத்தேச வர்த்தக ஒப்பந்தம் பற்றிய நான்காவது சுற்றுக் கலந்துரையாடல் 2023.03.27ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெற்றதுடன், குறித்த கலந்துரையாடலின் முன்னேற்றம் பற்றி ஜனாதிபதியினால் அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது. 2024ஆம் ஆண்டில் முதலாம் காலாண்டில் பேச்சுவார்த்தைகளைப் பூர்த்தி செய்து இருதரப்பினர்களும் கையொப்பமிடுவதற்காக குறித்த ஒப்பந்தத்தை தயார் செய்வதற்கும் அடுத்தகட்டப் பேச்சுவார்த்தை 2023.06.27 மற்றும் 28ஆம் திகதிகளில் கொழும்பில் நடத்துவதற்கும் இருதரப்பும் உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளமையை அமைச்சரவையின் கவனத்தில் கொள்ளப்பட்டது.

**02 சமூகப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்**

சமூகத்தில் மிகவும் இடர்களுக்கு ஆளாகக் கூடிய குழுக்களைப் பாதுகாப்பதற்காக பலம்வாய்ந்த சமூகப் பாதுகாப்பு வலையமைப்பொன்றை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான படிமுறைகளை மேற்கொள்வது சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன்வசதி நிகழ்ச்சித்திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள செயற்பாடுகளில் முதன்மையான செயற்பாடாக அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, திட்டமிடப்பட்டுள்ள சமூகப் பாதுகாப்புக் கருத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 200 மில்லியன் அமெரிக்க டொலர் கடன்தொகையை வழங்குவதற்கு உலக வங்கி உடன்பாடு தெரிவித்துள்ளது. இலக்காகக் கொள்ளப்பட்ட குடும்பங்களுக்கு நிதி நிவாரணம் வழங்கல், வறுமை மற்றும் இடர்களுக்கு ஆளாகின்றவர்களுக்கு வாய்ப்புகளை மேம்படுத்துகின்ற முன்னோடி வேலைத்திட்டம் மற்றும் சமூகப் பாதுகாப்பு முறைமையை பலப்படுத்தல் போன்ற மூன்று (03) கூறுகளின் கீழ் உத்தேசக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தவும் அதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக உலக வங்கியுடன் கடன் வசதிகள் பற்றிய பேச்சுவார்த்தையை நடத்துவதற்கும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. அரச வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகளை அறிமுகப்படுத்தல்**

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பித்து நாடளாவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகளை விரிவாக்கம் செய்தல் பற்றி சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது தேசிய காப்புறுதி நிதியத்தின்மூலம் அரச ஊழியர்கள் மற்றும் ஒய்வூதியம் பெறுபவர்களுக்கான சுகாதார காப்பீடு (அக்ரஹார) வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் குறிப்பிடத்தக்களவு பிரஜைகள் வேறு சுகாதாரக் காப்புறுதி உத்தேசத் திட்டத்தின் மூலம் காப்புறுதியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். அத்துடன், அரச சுகாதார சேவைகள் முறைமையில் மேலதிக வசதிகளுக்குப் பதிலாக தனிப்பட்ட ரீதியாக கட்டணம் செலுத்தி குறித்த வசதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒருசில பிரஜைகள் விருப்பத்துடன் உள்ளனர். அதற்கமைய, இலங்கைப் பிரஜைகளுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் அரச வைத்தியசாலைகளில் கட்டணம் செலுத்தும் நோயாளர் விடுதி வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக சுகாதார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**04. புதிய அரசிறை முகாமைத்துவ சட்டத்தை அறிமுகப்படுத்தல்**

2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புகள்) சட்டம் மற்றும் குறித்த சட்டத்துக்கு பின்னர் அறிமுகப்படுத்தியுள்ள திருத்தங்களின்கீழ் அரச நிதி நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படும். விசேட சந்தர்ப்பங்களில் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் கூடியதான குறித்த நிதி நிபந்தனைகளுடன் இணங்காமைக்கு சட்டத்தின் மூலம் ஏற்பாடுகள் வகுக்கப்பட்டிருப்பினும் குறித்த நிபந்தனைகளிலிருந்து விடுபடுவதற்கான ஏற்பாடுகள் சட்டத்தில் உள்வாங்கப்படவில்லை. அத்துடன் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள இலக்குகளை பூர்த்தி செய்வதற்கு இயலாத சந்தர்ப்பத்தில் அது தொடர்பாக மேற்கொள்ளப்படவேண்டிய படிமுறைகள் சட்டத்தில் திட்டவட்டமாக குறிப்பிடப்படவில்லை. குறித்த விடயங்களைக் கருத்திற்கொண்டு, சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்டுள்ள கடன் வசதிகள் வேலைத்திட்டத்தின் கீழ் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டமொன்றை வலுவாக்கம் செய்வதற்கு அரசு உடன்பட்டுள்ளது. அதற்கமைய 2025ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்டத்துடன் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய அரச நிதி நிபந்தனைகள் சட்டகம் ஒன்றை தாபிப்பதற்கு இயலுமான வகையில் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காகவும் அதற்கிணையாக 2003ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க அரசிறை முகாமைத்துவ (பொறுப்புகள்) சட்டத்தை முடிவுறுத்துவதற்கும் தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. தேயிலை, இறப்பர் மற்றும் தென்னந்தோட்டங்களை (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டத்தை திருத்தம் செய்தல்**

ஒரு ஏக்கர் அல்லது அதற்கு குறைவான தென்னங்காணிகளை மாத்திரம் துண்டாக்குவதற்கு இயலுமான வகையில் மட்டுப்பாடுகளை விதித்து தற்போது காணப்படுகின்ற சட்டரீதியான ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கான முன்மொழிவொன்று ஜனாதிபதியால் 2023 வரவு - செலவுத் திட்டம் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய ஏற்பாடுகளை வகுப்பதற்காக தேயிலை, இறப்பர், மற்றும் தென்னந்தோட்டங்களை (கூறுபோடுதலைக் கட்டுப்படுத்துதல்) சட்டத்தை திருத்தம் செய்வதற்காக தேவையான படிமுறைகளை மேற்கொள்வதற்காக பெருந்தோட்டத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. அவுஸ்திரேலியா சிட்னி விமான நிலையத்தில் சர்வதேச தரையிறக்க சேவைகளை (Ground Services) வழங்குவதற்கான ஒப்பந்தத்தை வழங்குதல்**

அவுஸ்திரேலியா சிட்னி விமான நிலையத்தில் சர்வதேச தரையிறக்க சேவைகளை வழங்குவதற்காக தற்போது குறித்த விமான நிலையத்தில் தரையிறக்க சேவைகள் வழங்குகின்ற அனைத்து உரிமப்பத்திரதாரர்களிடம் தரையிறக்க சேவை வழங்குநர்களிடம் மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச போட்டி முறைமையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்காக இரண்டு விலைமுறிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தரப் பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய குறித்த ஒப்பந்தம் Menzies Aviation (Australia) Pty Ltd நிறுவனத்துக்கு மூன்று வருட காலப்பகுதிக்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**07. இலங்கை துறைமுக அதிகார சபையின் கீழ் காணப்படுகின்ற துறைமுகங்களில் போதுமானளவு இழுக்கும் படகுத் தொகுதியை பேணிச் செல்லல்.**

போட்டி விலைமுறி செயன்முறையைக் கடைப்பிடித்து ஐந்து வருட காலப்பகுதிக்கு 70 டொன்களுக்கும் அதிகமான கொள்ளளவுடன் கூடிய இழுக்கும் (Tug) படகுகள் நான்கினை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக 2022.06.13ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய இழுக்கும் படகுகளை விநியோகிப்பதற்காக சர்வதேச போட்டி விலைமுறி கோரப்பட்டுள்ளதுடன், இரண்டு விலைமுறிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய ஐந்துவருட காலப்பகுதிக்காக இழுக்கும் படகுகள் நான்கினை வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கான பெறுகை, விபரங்களுடன் குறிப்பிட்டுள்ள குறைந்த விலைமுறிதாரரான M/s Sri Lanka Shipping Company Limited இற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியின் CFM Leap-1A வகையின் விமான இயந்திரத்தை திருத்துவதற்கான ஒப்பந்தத்தை வழங்குதல்**

ஸ்ரீ லங்கன் விமானக் கம்பனியின் CFM Leap-1A வகை விமான இயந்திரத்துக்கான பராமரிப்புச் சேவைகளை வழங்குவதற்கான தகைமையுடைய விநியோகத்தர்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டி விலைமுறி பொறிமுறையின் கீழ் விபரங்களுடன் கூடிய முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளதுடன் அதற்காக மூன்று முன்மொழிவுகள் கிடைத்துள்ளன. அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய CFM Leap-1A வகை விமான இயந்திரங்கள் மூன்றை (03) திருத்தம் செய்வதற்கான ஒப்பந்தத்தை Lufthansa Technik AG இற்கு வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. ஸ்ரீலங்கன் விமான சேவைகளுக்காக உலகளாவிய ரீதியில் 16 விமான நிலையங்களுக்குத் தேவையான எரிபொருள் விநியோகத்துக்கான ஒப்பந்தத்தை வழங்குதல்**

ஸ்ரீலங்கன் விமான சேவைகளுக்காக 17 விமான நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகிப்பதற்காக மட்டுப்படுத்தப்பட்ட சர்வதேச விலைமுறிகோரல் முறைமையின் கீழ் விலைமுறி கோரப்பட்டுள்ளது. அதற்காக 12 கம்பனிகளிலிருந்து 52 விலைமுறிகள் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், 49 விலைமுறிகள் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்துள்ளன. சீனாவின் ஷங்ஹாய் பியுடொங்க் விமான நிலையத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஒரேயொரு விலைமுறிதாரரின் விலைமுறி நிராகரிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள நிரந்தர பெறுகைக் குழுவின் பரிந்துரைக்கமைய 16 விமான நிலையங்களில் எரிபொருள் விநியோகிப்பதற்காக விபரங்களுடன் கூடிய பதிலளிப்புகளை வழங்கியுள்ளன. குறைந்த விலையை சமர்ப்பித்துள்ள விலைமுறிதாரர்களுக்கு அந்தந்த ஒப்பந்தங்களை வழங்குவதற்காக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. இலங்கை தேசிய தாதிப் பல்கலைக்கழகத்தை தாபித்தல்**

தற்போது சுகாதார அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற தாதிக் கல்லூரியை பல்கலைக்கழகமாக மாற்றியமைத்தல் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளை ஆராய்ந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக அதிகாரிகள் குழுவொன்றை நியமிப்பதற்கு 2023-03-01 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. குறித்த அதிகாரிகள் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு, இலங்கை தேசிய தாதிப் பல்கலைக்கழகத்தை தாபிப்பதற்காக கொள்கை ரீதியான அங்கீகாரத்தை வழங்குவதற்கும் அதற்கான சட்டமூலம் ஒன்றை தாரிப்பதற்கும் பதில் கல்வியமைச்சராக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் சுகாதார அமைச்சர் ஆகியோர் இணைந்து சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
திங்கட்கிழமை 2023.05.08
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5108 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 17,167,808.00
ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 9 8 7 4 8 4

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3350 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 101,656,760.24
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 34 47 71 72

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1563 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,697,138.00
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 2 7 1 1 4 0

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1138 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 89,118,398.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 29 70 80 82

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 417 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,634,862.60
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 07 50 51 58 — விசேட இலக்கினம் மிதுனம்

மெகா பவர் — சீட்டிழுப்பு இலக்கம் 1456 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 319,679,814.00
ஆங்கில எழுத்து Q — சுப்பர் இலக்கம் 10 — வெற்றி இலக்கங்கள் 04 12 24 76
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# யாழ்ப்பாண பல்கலை மாணவர்களினால் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கல் ஆரம்பம்



(யாழ்.நிருபர்)

முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் வீடு அமைந்துள்ள வல்வெட்டித்துறை, ஆலடி பகுதியில் கஞ்சி வழங்கும் நிகழ்வை மாணவர்கள் ஆரம்பித்து வைத்தனர்.

குறித்த கஞ்சி வழங்கும் நிகழ்வு தொடர்பில் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவிக்கையில், தமிழர் தாயகம் எங்கும் பயணித்து முள்ளிவாய்க்கால் கஞ்சியை எமது உறவுகளுடன் பரிமாறி எமது இனம் இனவழிப்புக்குள்ளான வரலாற்றையும் வலிகளையும் எமது இளைய தலைமுறையினருக்கு கடத்தும் செயற்பாட்டை முன்னெடுத்துள்ளோம்.

இந்த உயிர் காத்த கஞ்சியையே இன்று நாம் எமது உரிமை போராட்டத்தின் ஓர் வடிவமாக, எமது மக்களின் மீதான இனவழிப்பின் சர்வதேச நீதி தேடலின் ஓர் கருவியாக எமது இளம் சமுதாயத்துக்கு கடத்த வேண்டிய ஒரு கடப்பாட்டில் நாம் அனைவரும் உள்ளோம்.

நாம் எமது இனவிடுதலையை அடையும் வரை இக்குறியீடு கடத்தப்படும் என உறுதியெடுக்கின்றோம்.

நாம் முன்னெடுக்கும் இச்செயல்பாட்டில் அனைத்து தமிழ் மக்களும் எல்லா வேறுபாடுகளையும் துறந்து தமிழினமாக எம்முடன் இணையுமாறு அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

உங்களின் மாவட்டத்துக்கு வரும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு கஞ்சிக்கு உரிய அரிசி மற்றும் இதர பொருட்களை வழங்கி விடுதலைக்கான பயணத்தில் பங்கெடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அத்துடன் தமிழர் தாயகம் எங்கும் இயங்கும் சமூக கட்டமைப்புகள், சிவில் சமூக அமைப்புகள், பொது நிறுவனங்கள், பாடசாலைகள், கல்லூரிகள், ஆலய நிர்வாகங்கள், சமூக இயக்கங்கள், தமிழ் தேசியத்தை நேசிக்கும் அரசியல் கட்சிகள், தனி நபர்களாகவும் கூட்டாகவும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை உங்களை சூழ உள்ளவர்களுக்கு, குறிப்பாக இளையவர்களுக்கு பரிமாறி வரலாற்றையும் எங்கள் இனத்தின் வலிகளையும் தொடராக உலகெங்கும் உள்ள அனைவருக்கும் கடத்துமாறு வேண்டி நிற்கின்றோம் என்றனர்.

# கடத்தல் சம்பவங்கள் காரணமாக மன்னார் பாடசாலைகளில் விசேட இராணுவ பாதுகாப்பு





(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் கடந்த சில நாட்களாக சிறுவர்களை இலக்குவைத்து கடத்தல் முயற்சிகள் இடம்பெறுவதாகவும் கடந்த வார இறுதி நாட்களில் மக்கள் நடமாட்டம் குறைந்த பாதை வழியாக பயணித்த இரு சிறுவர்களுக்கு உணவுப் பொருட்களை வழங்கி கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த விடயம் மாவட்ட அரசாங்க அதிபர், வலயக்கல்விப் பணிப்பாளர், மன்னார் பொலிஸார், இராணுவத்தினரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை(09) மன்னாரிலுள்ள பாடசாலைகளில் விசேட இராணுவ பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்துடன் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டனர்.

அதேநேரம் அதிகளவான பெற்றோரும் பிள்ளைகளுடன் பாடசாலைக்கு வருவதையும் மாணவர்கள் குழுக்களாக பயணிப்பதையும் வீதிகளில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

மேலும் குறித்த கடத்தல் முயற்சி தொடர்பில் நேற்றைய தினம் மன்னார் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் குறித்த கடத்தல் கும்பல் மற்றும் வாகனம் தொடர்பில் மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடக்கு
செய்திகள்
thamilannorth@gmail.com

# ஓய்வுபெற்ற வைத்தியரிடமிருந்து பணம், நகைகள் கொள்ளை





(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் -நானாட்டான் பிரதேசத்தில் ஓய்வுபெற்ற வைத்தியர் ஒருவரின் தனியார் கிளினிக்குக்கு ஞாயிற்றுக்கிழமை (07) இரவு 9 மணியளவில் புகுந்த கொள்ளையர்கள் கத்தியை காட்டி மிரட்டி சுமார் 5 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகைகளையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக தெரியவருகிறது.

இச்சம்பவமானது நானாட்டான் பிரதேசத்தில் அமைந்துள்ள குறித்த வைத்தியரின் தனியார் கிளினிக்கில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

ஞாயிற்றுக்கிழமை இரவு ஒன்பது மணியின் பின் கிளினிக் வளாகத்தினுள் நுழைந்த இரண்டு பேர் சிங்களத்திலும் தமிழிலும் பேசிக் கொண்டு குறித்த வைத்தியரிடம் கத்தியை காட்டி மிரட்டி உள்ளனர்.

இதன்போது சுமார் 5 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் மற்றும் நகை போன்றவற்றை அபகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது வைத்தியரின் மூக்குக் கண்ணாடி உடைந்ததில் வைத்தியருக்கு முகத்தில் காயங்கள் ஏற்பட்டுள்ளன.

குறித்த திருட்டுச் சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் (08) காலை பாதிக்கப்பட்ட வைத்தியர் முருங்கன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதேவேளை நானாட்டான் பிரதேசத்தில் தொடர்ச்சியாக பல திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறுவதாக பொதுமக்கள் தரப்பில் இருந்து தெரிவிக்கப்பட்டது.

குறித்த வைத்தியர் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கஞ்சாவுடன் இருவர் கைது

(சாவகச்சேரி நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தவசிக்குளம் பகுதியில் 7 கிலோ 720கிராம் கஞ்சாவுடன் விசேட அதிரடிப்படையினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மன்னாரில் இருந்து வருகை தந்த அதிரடிப் படையினரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்ததுடன்-சந்தேக நபர்களையும் கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்கள் யாழில் அதிகரிப்பு

யாழ்ப்பாண நகரில் அண்மைக் காலங்களாக மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக பொலிஸ் நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ். நகர்ப்புற பகுதியில் வீதிகளிலும் வீட்டுக்கு முன்னாலும் மோட்டார் சைக்கிள்களிலேயே திறப்பை வைத்து விட்டு செல்லும் மோட்டார் சைக்கிள்களே திருடப்பட்டு வருகின்றன. அவற்றை திருடிச் செல்லும் கும்பல் எரிபொருள் தாங்கியில் இருக்கும் எரிபொருள் முடியும் வரை மோட்டார் சைக்கிளை ஓடிவிட்டு ஆள் நடமாட்டமற்ற வீதிகளில் நிறுத்தி விட்டு செல்லும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

கடந்த இரண்டு நாட்களில் மாத்திரம் இவ்வாறான மூன்று சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனவே யாழ்ப்பாண நகர்ப் பகுதியில் மோட்டார் சைக்கிள்களை நிறுத்திச் செல்லும் போது அதில் திறப்பை வைக்க வேண்டாம் எனவும் பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.



மஸ்கெலியா பிரதேசத்தில் 2021 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு மஸ்கெலியா இலங்கை வங்கி கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்றது. மஸ்கெலியா இலங்கை வங்கி கிளையின் முகாமையாளர் திருமதி ஏ.எம்.சி.அபேகோன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வங்கியின் பிராந்திய முகாமையாளர் பி.விஸ்வநாதன் அதிதியாகக் கலந்துகொண்டு மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கிவைத்தார். (தலவாக்கலை செய்தியாளர்)

# எம்பிலிபிட்டியவில் விபத்து இளைஞர் உயிரிழப்பு

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

எம்பிலிபிட்டிய பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று எதிரே வந்த பவுசர் ஒன்றுடன் மோதியதால் மோட்டார் சைக்கிளில் பயணித்த 23 வயதுடைய இளைஞர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இரத்தினபுரி, எம்பிலிபிட்டிய வீதியில் உடகம சந்தியில் இவ் விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த பவுசரில் மோதியே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எம்பிலிபிட்டிய, நெட்டொல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞரே இவ்விபத்தில் உயிரிழந்துள்ளார். இச்சம்பவம் தொடர்பில் பவுசரின் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை எம்பிலிபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கழிவுத் தேயிலையுடன் கைதான இருவர் பிணையில் விடுதலை

நோர்வூட்டில் 428 கிலோ கிராம் கழிவுத் தேயிலையுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரை ஹட்டன் நீதவான் நீதிமன்றம் ஐந்து இலட்சம் ரூபா சரீரப் பிணையில் விடுவித்துள்ளது. அத்துடன் எதிர்வரும் ஜூன் 05 ஆம் திகதி மீண்டும் நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறும் நீதிமன்றம் பணித்துள்ளது.

பொகவந்தலாவையிலிருந்து கம்பளைக்கு கொண்டு செல்வதற்காக கழிவுத் தேயிலை பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக நோர்வூட் பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் இருவரும் கம்பளை, லியங்காவத்த பகுதியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். இதன்போது கைப்பற்றப்பட்ட கழிவுத் தேயிலையை அழிக்குமாறு நீதவான் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தின் முன்னாள் அமைச்சர், ஜீவனை சந்தித்து கலந்துரையாடல்



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள தமிழகத்தின் முன்னாள் செய்தித்துறை அமைச்சர் கடம்பூர் செ.ராஜு தலைமையிலான அ.தி.மு.க. குழுவினர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானை கொழும்பில் உள்ள அமைச்சில் நேற்றுமுன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை - இந்திய சமுதாய பேரவையின் சார்பில் சிவராமன் மற்றும் காந்தி ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

எம்.ஜி.ஆர். அறக்கட்டளை மூலம் முன்னெடுக்கப்படும் பணிகள் தொடர்பில் அமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் எடுத்துரைத்த அவர்கள், இலங்கை மக்களுக்கும் சேவை செய்ய தயாராக இருப்பதாக தமது விருப்பத்தை வெளியிட்டனர்.

இந்தக் குழுவினரால் மக்களுக்காக உதவித் திட்டங்களை முன்னெடுக்கும் பட்சத்தில் அதற்கான முழு ஒத்துழைப்பையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் வழங்கும் என அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்போது தெரிவித்தார்.

# ஐக்கிய வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கொட்டகலையில் அன்னதான நிகழ்வு



(செ.திவாகரன்)

கொட்டகலை ஐக்கிய வர்த்தக சங்கம் இரண்டாவது நாளாகவும் ஒழுங்கு செய்திருந்த அன்னதான நிகழ்வு அச்சங்கத்தின் தலைவர் புஸ்பா விஸ்வநாதன் தலைமையில் இடம்பெற்றது.

கொட்டகலை ஐக்கிய வர்த்தகம் சங்கம் நல்லிணக்கத்தை அடியொட்டி தமிழர் செறிந்து வாழும் கொட்டகலை நகரில் 10 ஆவது தடவையாக ஒழுங்கு செய்திருந்த அன்னதான நிகழ்வு இரண்டு நாட்கள் இடம்பெற்றது.

இந்த அன்னதான நிகழ்வில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர்.

கொமர்ஷல் புதிய நகர் துர்க்கையம்மன் ஆலயத்தின் பிரமத குரு சிவஸ்ரீ வேலு சுரேஸ்வர சர்மாவின் சமய வழிபாடுகளுடன் ஆரம்பித்த அன்னதான நிகழ்வில் பொது சுகாதார பரிசோதகர்கள், ஹட்டன் மற்றும் திம்புல்ல பத்தனை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச வர்த்தகர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட, வெசாக் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு நாடு முழுவதிலும் பௌத்த விகாரைகளில் பூஜை வழிபாடுகளும் தான தர்மங்களும் இடம்பெற்றன. புத்த பெருமான் வாழ்நாள் முழுவதிலும் தான தர்மங்களை செய்து துறவியானவர். இதனை பின்பற்றி சகல இன மக்களும் இணைந்து இவ்வாறு ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்திருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இது சிறுவர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் எடுத்துக்காட்டாக உள்ளது என்றார்.

# அல்குர்ஆன் ஓதல் பயிற்சி

(உக்குவளை செய்தியாளர்)

மாத்தளை வை.எம்.எம்.ஏ. கிளையின் ஏற்பாட்டில் மாத்தளை, கொங்காவல வீதியிலமைந்துள்ள ரீடிங் ரூமில் (வாசிக்கும் அறை) வயது வந்தவர்களுக்கான இலவச அல்குர்ஆன் ஓதல் பயிற்சி வழிகாட்டல் வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் அதிகாலை 5 மணிமுதல் அஷ்ஷெய்க் கைஸ் (முப்தி-ஹலீமி) மற்றும் அஷ்ஷெய்க் தன்சீர்(முப்தி-ஹலீமி) ஆகிய உலமாக்களால் இப்பயிற்சி வழிகாட்டல் வகுப்பு நடத்தப்படுகிறது. இவ் வகுப்பில் இணைந்து பயன்பெறவிரும்பும் 45வயதுக்கு மேற்பட்டவர்கள் மாத்தளை, கொங்காவல வீதியில் தினமும் திறந்துவைக்கப்பட்டுள்ள ரீடிங் ரூமில் காலை 9.30 மணி முதல் 12.30 மணி வரையான காலப்பகுதியில் தம்மைப் பதிவுசெய்துகொள்ளலாம் என வை.எம்.எம்.ஏ. கிளை செயலாளர் டி.எம்.நிஹ்மதுல்லாஹ் தெரிவித்துள்ளார்.

மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# கைபேசியை திருடியவர் பொலிஸாரால் கைது

(கலஹா செய்தியாளர்)

கம்பளை, தெல்பிட்டிய பிரதேசத்தில் வெசாக் தானசாலை வரிசையில் நின்ற யுவதியின் பெறுமதிமிக்க கையடக்கத் தொலைபேசியை திருடிய நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

கம்பளை, துனுக்கே உல்ல பிரதேசத்திலிருந்து தனது மனைவியுடன் முச்சக்கர வண்டியில் தானசாலைக்கு வருகைதந்த ஒருவர் யுவதியின் கைத்தொலைபேசியை திருடி தனது முச்சக்கர வண்டியில் மறைத்துவைத்துள்ளார்.

தனது தொலைபேசி காணாமல் போனமை குறித்து குறித்த யுவதி அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து பொலிஸார் சந்தேகநபரிடம் விசாரித்துள்ளனர். இதன்போது சந்தேக நபர் தான் லொறி ஒன்றில் வந்ததாக பொய் கூறி தலைமறைவாகியுள்ளார்.

இதனையடுத்து பொலிஸார் இரகசியமாக சந்தேக நபரை கண்காணித்து வந்த நிலையில் சந்தேக நபர் முச்சக்கர வண்டியில் மனைவியுடன் தப்பிச்செல்ல முற்பட்ட சந்தர்ப்பத்தில் கைது செய்துள்ளதோடு திருடப்பட்ட தொலைபேசியை முச்சக்கர வண்டியினுள் இருந்து மீட்டுள்ளனர்.

# இலாபமீட்டும் துறையாக கடற்றொழில் மாறிவருகிறது

## பிரதமர் தினேஷ் குணவர்தன






நஷ்டத்தில் இயங்கிவந்த கடற்றொழில் துறை இலாபமீட்டும் துறையாக மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிநடத்தலில் செயற்பட்டு வருகின்ற சீநோர் நிறுவனத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட நிகழ்வு நேற்றுமுன்தினம் (08) இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பிரதமர் தினேஷ் குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நஷ்டத்தில் இயங்கிவந்த கடற்றொழில் துறை இலாபமீட்டும் துறையாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் தொடர் முயற்சியின் காரணமாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நோர்வே அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட சீநோர் நிறுவனமானது மரத்தினாலான படகுகளையே நிர்மாணித்து வந்தது. இந்நிலையில் அதனை எனது தந்தையான பிலிப் குணவர்த்தனவின் காலத்தில் பிளாஸ்ரிக் படகுகளை கட்டும் நடவடிக்கை மாற்றப்பட்டது.

அத்துடன், ஐந்தாண்டு வேலைத்திட்டத்தில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி படகு கட்டுமானம் உட்பட சுற்றுலாத்துறை அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்க அரசு தேவையான ஒத்துழைப்பை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

**கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா**

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உரையாற்றுகையில், "1967ஆம் ஆண்டு காரைநகரில் சீநோர் நிறுவனம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் மட்டக்குளி, வீரவில, லுணுவில பகுதிகளில் அதன் கிளைகள் விஸ்தரிக்கப்பட்டன.காரைநகரில் சீநோர் நிறுவனத்தின் படகு கட்டும் தொழிற்சாலையின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பித்து செயற்றிறன்மிக்கதாக முன்னெடுத்துச் செல்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் கூறினார்.

சீநோர் நிறுவனத்தின் செயற்பாடுகளை விஸ்தரித்து, அதன் செயற்பாடுகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் நோக்கில், சீநோர் நிறுவனத்துக்கான இணையத்தளமும் இதன்போது அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

இவ்விழாவில் சீநோர் நிறுவனத்தில் 25 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய 10 ஊழியர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஸாந்த டி சில்வா, பாராளுமன்ற உறுப்பினர் யதாமினி குணவர்த்தன, கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து இரத்நாயக்க உள்ளிட்ட பிரமுகர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## நியூ டயமண்ட், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்துக்கள்

# உண்மைகளை ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்க பாராளுமன்ற விசேட தெரிவுக்குழுவை நியமிக்கவும்

## சபாநாயகருக்கு ஆளுங்கட்சி உறுப்பினர்கள் கடிதம்

இலங்கை கடற்பரப்பில் ஏற்பட்ட நியூ டயமண்ட் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் ஆகிய கப்பல்களின் விபத்துக்கள் தொடர்பான உண்மைகளை ஆராய்ந்து தேவையான பரிந்துரைகளை வழங்குவதற்கு ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 15 பேர் கொண்ட பாராளுமன்ற தெரிவுக்குழுவை உடனடியாக நியமிக்குமாறு ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் 21 பாராளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுதொடர்பான கோரிக்கைக் கடிதத்தை மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் அவர்கள் நேற்று கையளித்தனர்.

ஜயந்த கடகொட, சஞ்சீவ எதிரிமான்ன, யதாமினி குணவர்தன, டபிள்யூ.டி.வீரசிங்க, ரஞ்சித் பண்டார, மதுர விதானகே, ராஜிகா விக்கிரமசிங்க, குணதிலக்க ராஜபக்ஷ, குமாரசிறி ரத்நாயக்க, ஜகத் குமார, மஹிந்தானந்த அழுத்கமகே, சம்பத் அத்துக்கோரல, நாலக்க கொடேகொட, சுதர்சன தெனிபிட்டிய, கே.ஏ.யு.கே.குணதிலக, நிமல் லான்சா, எச்.எம்.எம். ஹரீஸ், சரத் வீரசேகர, முதித டி சொய்சா, எஸ்.பி.திஸாநாயக்க மற்றும் பிரதீப் உந்துகொட ஆகிய பாராளுமன்ற உறுப்பினர்களே இது தொடர்பான கடிதத்தில் கையொப்பமிட்டுள்ளனர்.கப்பல் விபத்துக்கள், விபத்துக்களின் பின்னர் ஏற்பட்ட தலையீடுகள் மற்றும் குறைபாடுகள் குறித்து சமூகத்தில் பெரும் விவாதங்கள் இடம்பெற்றுவருவதாகவும் குறித்த கடிதத்தின் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இந்த விபத்துக்கள் மற்றும் கப்பல் காப்புறுதி நிறுவனங்களுக்கிடையே இடம்பெற்ற பரிவர்த்தனைகள் குறித்து சபைக்கு உள்ளேயும் வெளியேயும் வெளிப்படுத்தியதாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.கப்பல் விபத்துக்கள் தொடர்பான உண்மைகள் வெளிவர வேண்டியிருப்பதால் இது தொடர்பில் விசேட பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை நியமித்து விசாரணை நடத்த வேண்டும் என ஆளும் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, கப்பல் விபத்துக்கள் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள நிதிக் குற்றச்சாட்டை அடக்கும் நோக்கில் எதிர்க்கட்சிகள் விவாதம் கோருகிறது.எதிர்க்கட்சிகளின் முயற்சிகளை முறியடிக்கும் நோக்கில் ஆளும் கட்சி இந்த விசேட தெரிவுக்குழுவை நியமிக்குமாறு சபாநாயகரிடம் கோரவுள்ளது என்றும் கூறினார்.





**இன நல்லிணக்கத்தை மேம்படுத்தும் வகையில் கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனம், பொரளை போதி விஹாரை விஹாராதிபதி அத்துல அனுநாயக்கவுடன் இணைந்து நடத்திய அன்னதானம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனத் தலைவர் ரிஸான் குசைன், புலஸ் லேன் மஸ்ஜித் நம்பிக்கையாளர் மௌலவி பிர்தௌஸ் , பொரளை இந்து ஆலயத்தின் பிரதான குருக்கள் விநாயகன் குருக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.இதன்போது சுமார் 750க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.இதன்போது குறித்த விஹாரையின் புனரமைப்புக்காக கொள்ளுப்பிட்டி மஸ்ஜித் சம்மேளனமும் அவுஸ்திரேலிய நலன்புரி அமைப்பும் இணைந்து விஹாராதிபதியிடம் நிதி உதவியும் வழங்கினர். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)**

# யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸின் கல்லூரி தினம்




யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு கல்லூரி தின நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் காலை கல்லூரி பீற்றோ மண்டபத்தில் அதிபர் தலைமையில் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபரும் கல்லூரியின் பழைய மாணவருமான சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டார்.

இதன்போது கல்லூரியை அறிவோம் என்ற தொனிப் பொருளில் மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிக்கான பரிசளிப்பும் இடம்பெற்றது.வண பிதா யோசப் நைற் அவர்களால் 1823 ஆம் ஆண்டில் அங்கிலிக்கன் திருச்சபை சார்ந்து நல்லூரில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட நாளே கல்லூரி தினமாகவும் நிறுவுனர் தினமாகவும் அனுஷ்டிக்கப்படுகிறது. நிகழ்வின் முன்னதாக சென் ஜோன்ஸ் சிற்றாலயத்தில் விசேட திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# இரு நாட்டு உறவுகள் தொடர்பில் நீதி அமைச்சர் - சீனத் தூதுவர் பேச்சு



நீதி சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாச ராஜபக்ஷ மற்றும் இலங்கைக்காக சீனத் தூதுவர் ஸி சென்ஹொங் ஆகியோருக்கிடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் நீதி அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது இரு நாடுகளுக்குமிடையிலான இரு தரப்பு உறவு மேம்படுத்துதல் தொடர்பிலும் நீண்டநாள் உறவுகளை தொடர்ந்து முன்னெடுப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும் இரு நாடுகளுக்கும் இடையிலான சட்ட தொடர்புகள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டுள்ளதுடன் நீதி அமைச்சரினால் தூதுவருக்கு நினைவுச் சின்னமொன்றும் வழங்கப்பட்டது.

# மௌலவி மஸா ஆலிம் காலமானார்

(பேருவளை செய்தியாளர்)



தர்கா நகர் ஜமாத் கவுன்சில் தலைவரும் தர்கா நகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் நிர்வாக சபைத் தலைவரும் சீனன் கோட்டை பாஸிய்யா பெரிய பள்ளிவாசல் முன்னாள் கதீபும் முஸ்லிம் விவாகப் பதிவாளருமான கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எஸ்.எம். மஸா ஆலிம் (பஹ்ஜி) நேற்று முன்தினம் (08 ) மாலை காலமானார். ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னாள் கலீபதுல் குலபாவான மர்ஹூம் மௌலவி ஸெய்யித் அஹ்மத் ஆலிம் (பஹ்ஜி) மற்றும் மர்ஹூமா உம்மு ஹப்ஸா தம்பதியின் புதல்வரான இவருக்கு வயது 76 ஆகும். நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் நோயுற்றிருந்த நிலையில் கடந்த 08 ஆம் திகதி மாலை தர்கா நகர் இல்லத்தில் காலமானார். ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காகவும் சன்மார்க்க கல்வியின் முன்னேற்றத்துக்காகவும் தர்கா நகரின் எழுச்சிக்காகவும் பல தசாப்த காலம் அளப்பரிய பணியாற்றிய அன்னாரின் ஜனாஸா நேற்று 09ஆம் திகதி மாலை தர்கா நகர் மீரா ஜூம்ஆப் பள்ளிவாசல் (தெருவுப் பள்ளி)மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாஸா நல்லடக்கத்தில் ஸாதாத்மார்கள், உலமாக்கள், புத்திஜீவிகள், அரசியல்வாதிகள், ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபாக்கள் உட்பட பெருமளவான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

# மஸா ஆலிமின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு

## பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் அனுதாபம்

(பேருவளை செய்தியாளர்)

களுத்துறை மாவட்டத்தின் பிரபல சன்மார்க்க அறிஞர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எஸ்.எம். மஸா ஆலிம் (பஹ்ஜி)யின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் என்று பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

சன்மார்க்க அறிஞர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எஸ்.எம். மஸா ஆலிம் (பஹ்ஜி)யின் மறைவு குறித்து அவர் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, மர்ஹூம் கலீபா மஸா ஆலிம் தனது தந்தையின் வழியில் சன்மார்க்கக் கல்வி, உலகக் கல்வியின் முன்னேற்றத்துக்காகவும் விசேடமாக தர்கா நகரின் அபிவிருத்திக்காகவும் ஷாதுலிய்யா தரீக்காவின் முன்னேற்றத்துக்காகவும் மகத்தான பணிகளை செய்து மக்களின் நன்மதிப்பை பெற்றுக் கொண்டார்.

தர்கா நகர் ஜமாத் கவுன்சில், தர்கா நகர் முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியின் நிர்வாக சபை ஆகியவற்றின் தலைவராக இருந்து ஆற்றிய சேவைகள் அளப்பரியதாகும். முஅய்யதுல் இஸ்லாம் அரபுக் கல்லூரியை கட்டியெழுப்புவதில் முழு மூச்சுடன் தியாகத்தோடு உழைத்தார். தர்கா நகரில் புகழ்பூத்த குடும்பத்தில் பிறந்த அவர் பேருவளை மற்றும் தர்கா நகர் பகுதி பல பள்ளிவாசல்களில் கதீபாகவும் கடமையாற்றியிருந்தார்.

முஸ்லிம் விவாகப் பதிவாளராக பல தசாப்த காலம் சிறப்பாக பணியாற்றினார். அவரின் மறைவு தர்கா நகருக்கு மாத்திரமின்றி களுத்துறை மாவட்டத்துக்கே பேரிழப்பாகும். அன்னாரது ஆன்ம ஈடேற்றத்துக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சன்மார்க்க அறிஞர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி எஸ்.எம். மஸா ஆலிம் (பஹ்ஜி)யின் மறைவு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களான இப்திகார் ஜமீல், எம்.எம்.அம்ஜாத், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.எம். அஸ்லம், முன்னாள் பிரதேச சபைத் தலைவர் ஏ.ஆர்.எம்.பதியுத்தீன் உட்பட பலரும் அனுதாபச் செய்திகளை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.






**வெசாக் தினத்தை முன்னிட்டு கொழும்பு, செட்டியார் தெரு, 172 ஆம் கடைத்தொகுதி இளைஞர்கள் ஏற்பாடு செய்த அன்னதானம் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை மாலை திருச்செல்வம், சுகுமார், செல்வம், மற்றும் நிஷாந்தன் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.**

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (09.05.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 209.8163 | 222.1010 |
| கனேடியன் டொலர் | 231.2177 | 244.7721 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 44.1678 | 47.5652 |
| யூரோ | 341.1064 | 359.1320 |
| ஜப்பான் யென் | 2.2995 | 2.4191 |
| சிங்கப்பூர் டொலர் | 233.4817 | 246.8289 |
| ஸ்ரேலிங் பவுண் | 391.6879 | 411.5682 |
| சுவிஸ் பிராங் | 346.6137 | 368.0792 |
| ஐ.அ. டொலர் | 311.0091 | 325.9516 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 844.8334 |
| குவைட் | குவைட் தினார் | 1,039.0921 |
| ஓமான் | ஓமான் றியால் | 827.2903 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.1664 |
| சவுதி அரேபியா | சவுதி அரேபிய றியால் | 84.9350 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 86.7367 |

# இறக்காமம் பிரதேச செயலகத்தில் காணி அனுமதிப்பத்திரம் வழங்கல்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவில் மிக நீண்ட காலமாக இருந்துவரும் காணி அனுமதிப்பத்திரப் பிரச்சினைகளுக்கு இறக்காமம் பிரதேச செயலாளர் அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம்.ரஷ்ஷானின் (நளீமி) வழிகாட்டலில் காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

அந்தவகையில், இறக்காமம்-07ஆம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் நீண்ட காலமாக குடியிருந்துவரும் குடியிருப்பாளர்களுக்கும் காணி அனுமதிப்பத்திரம் கோரி விண்ணப்பித்தவர்களுக்கும் காணி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான காணிக் கச்சேரி பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் திங்கட்கிழமை(08) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் காணி உத்தியோகத்தர் என்.எல்.எம்.மாஹிர், காணிப் பிரிவு உத்தியோகத்தர்களான காணி வெளிக்களப் போதனாசிரியர் எம்.பி.சாதிக், அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை.எம்.சில்மி மற்றும் கிராம உத்தியோகத்தர்களான எம்.சீ.எம்.சமீர், எம்.ஜே.எம்.அதீக் ஆகியோர் கலந்துகொண்டதோடு பொதுமக்களும் வருகைதந்து பயன்பெற்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இரத்த தான முகாம் சனிக்கிழமை(06) இடம்பெற்றது. இந்நிகழ்வில் 100க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். சம்மாந்துறை, அம்பாறை ஆகிய வைத்தியசாலைகளைச் சேர்ந்த வைத்தியர்கள், தாதிமார்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.



அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்துக் குட்பட்ட முன்பள்ளி பாடசாலைகளுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் நீர்வடி கட்டி இயந்திரம் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் அண்மையில் இடம்பெற்றது. இதன்போது உதவிப் பிரதேச செயலாளர் சட்டத்தரணி எப். நஹிஜா முஸாபிர் நீர்வடிகட்டி இயந்திரத்தை வழங்கினார். (திராய்க்கேணி செய்தியாளர்)





வெசாக் தினத்தை முன்னிட்டு கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தானம் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(08) திருகோணமலை உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள மாகாண சமூக சேவைகள் திணைக்களத்துக்கு முன்னால் இடம்பெற்றது. மாகாணப் பணிப்பாளர் ஏ.ஜி.தெய்வேந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் பலர் கலந்துகொண்டனர். (மீனோடைக்கட்டு செய்தியாளர்)

# சுற்றுலாத்துறை அபிவிருத்தி தொடர்பில் கலந்துரையாடல்



(மாவடிப்பள்ளி, திகாமடுல்ல செய்தியாளர்கள்)

அம்பாறை மாவட்டத்தில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான வழிவகைகள் மற்றும் திட்டங்களை தயாரித்து வடிவமைப்பது தொடர்பான உயர் மட்டக் கலந்துரையாடலொன்று செவ்வாய்க்கிழமை(09) அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமான டபிள்யூ. வீரசிங்கவின் ஏற்பாட்டிலும் தலைமையிலும் இடம்பெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாஉல்லா, எஸ்.எம்.எம்.முஷாரப், மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ.டக்ளஸ், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.பி.அனீஸ், அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கமல் நெத்மினி, அதிகாரிகள் சுற்றுலாத்துறை அமைப்பினர் மற்றும் பொலிஸ் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் விரைவில் அம்பாறையில் இடம்பெறவுள்ள மாவட்ட சுற்றுலாத்துறை அபிவிருத்தி மாநாட்டின் முன்னோடியாகவே இக்கூட்டம் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# புனரமைக்கப்பட்ட வைத்திய ஆய்வுகூடம் திறந்துவைப்பு

(மாளிகைக்காடு, பாலமுனை செய்தியாளர்கள்)



பாலமுனை பிரதேச வைத்தியசாலையில் பீ.எஸ்.எஸ்.பீ.திட்டத்தின் கீழ் மீள் புனரமைப்பு செய்யப்பட்ட வைத்திய ஆய்வுகூடம் மற்றும் சமையலறை என்பவற்றின் திறப்பு விழா நிகழ்வு திங்கட்கிழமை (08) இடம்பெற்றது.

பாலமுனை பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி எம்.ஜே.எம்.நௌபல் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸ் பிரதம அதிதியாகவும் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம்.பி.ஏ.வாஜித் கௌரவ அதிதியாகவும் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி உள்ளிட்ட பணிமனையின் பிரிவுத் தலைவர்கள் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

குறித்த ஆய்வு கூடத்தை கல்முனை பிராந்தியத்துக்குரிய தனித்துவமானதும் பிரதானதுமான ஆய்வுகூடமாக மாற்றுவதற்கான திட்ட யோசனையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் மாகாண மற்றும் மத்திய அமைச்சின் சுகாதாரப் பிரிவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேலும் ஆய்வு கூடத்துக்கு பிரதேச மக்களினதும் அபிவிருத்தி குழுவினதும் அளப்பரிய பங்களிப்பு கிடைக்கப்பெற்றுள்ளதுடன் வைத்தியசாலையின் நலன்விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருட்களாலும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்ட வாகன தரிப்பிடமும் பாவனைக்காக அன்றைய தினம் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



கல்லடி, புதுமுகத்துவாரம் புனித இக்னேசியஸ் வித்தியாலயத்தில் 18 வருடங்களாக பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்ற த. உமாபரமேஸ்வரனுக்கான பிரியாவிடை நிகழ்வு வித்தியாலய அதிபர் பி.தங்கவேல் தலைமையில் திங்கட்கிழமை (08) வித்தியாலய நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன்போது கேக் வெட்டப்பட்டதுடன் அதிபரால் பொன்னாடை போர்த்தி மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார். (கல்லடி செய்தியாளர்)






திருகோணமலை மாவட்ட செயலகத்தின் மனித வலு, வேலைவாய்ப்புப் பிரிவு, திறன் மற்றும் தொழில் கல்விப் பிரிவு, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பிரிவு ஆகியன இணைந்து தொழில் மற்றும் தொழில் கல்வி சந்தையை தேடும் மாவட்ட இளைஞர் யுவதிகள், பாடசாலையை விட்டு இடைவிலகியோர், தொழில் தேடுவோர் பயன் பெறும் வகையில் ஏற்பாடு செய்த தொழிற்சந்தை திருகோணமலை விக்னேஸ்வரா மகா வித்தியாலயத்தில் செவ்வாய்க்கிழமை(09) இடம்பெற்றது. இதன்போது உள்ளூர் வெளியூர் தொழில் தருநர்கள், தொழிற்பயிற்சி நிறுவனங்கள், உயர் கல்வி நிறுவனங்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர்கள், இளைஞர் யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் சேவைகள் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள், வழிகாட்டல்களை மேற்கொண்டனர். (அப்துல்சலாம் யாசீம்)



வெசாக் தினத்தை முன்னிட்டு தானம் வழங்கும் நிகழ்வு தம்பலகாமத்தில் திங்கட்கிழமை(08) இடம்பெற்றது. குறித்த நிகழ்வை தம்பலகாமம் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்திருந்தது. கண்டி - திருகோணமலை பிரதான வீதியின் பிரதேச செயலகத்துக்கு முன்னால் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலக சக உத்தியோகத்தர்கள் இணைந்து மக்களுக்கு தானம் வழங்கினர். (கிண்ணியா செய்தியாளர்)

# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

(அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்)



அட்டாளைச்சேனை அறபா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் "கற்றலுக்கு கரம் கொடுப்போம்" நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் பாடசாலையின் 156 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாதணிகள் வழங்கும் நிகழ்வு திங்கட்கிழமை(08) மாலை பாடசாலையின் கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் செயலாளரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான ஏ.எல்.பாயில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்விப் பணிப்பாளர் அஷ்-ஷெய்க் ஏ.எம்.றஹ்மத்துல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பாடசாலையில் மாகாண மட்டத்தில் திறமை காட்டிய மாணவர்களைப் பாராட்டி சான்றிதழ், பரிசுப் பொதிகளை வழங்கினார்.

அக்கரைப்பற்று கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எம்.நௌபர்டின், எம்.ரீ.எம்.ஜெனுபர், பாடசாலை அதிபர் எம்.ஏ. அன்சார், ஓய்வு பெற்ற அதிபர் ஏ.சீ.சைபுடின், ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் மௌலவி யூ.எம்.நியாஸி, ஓய்வு பெற்ற ஆசிரியர் எம்.ஐ.எம்.மஜீத், பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் சைபுடின் றிஸ்வி, உறுப்பினர் எம்.ஐ.சவாஹிர் (சீசீ) உட்பட பழைய மாணவர் சங்கத்தின் உறுப்பினர்கள், எஸ்.டி.சீ. உறுப்பினர்கள், பாடசாலை பிரதி அதிபர், ஆசிரியர்கள், முக்கியஸ்தர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



மருதமுனை அல்-ஹிக்மா கனிஷ்ட பாடசாலையில் தரம் ஒன்று மாணவர்களை வரவேற்கும் வித்தியாரம்ப விழா அதிபர் எம்.எல்.ஏ.மஹ்றூப் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹூதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கினார்.

(மருதமுனை செய்தியாளர்)





ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலயத்தில் தரம் - 06 மாணவர்களை வரவேற்கும் விழா பாடசாலை அதிபர் அஷ்-ஷெய்க் யூ.கே.அப்துர் ரஹீம் தலைமையில் செவ்வாய்க்கிழமை(09) இடம்பெற்றது. உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நஸீமின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற இவ்விழாவில், தரம் 06 மாணவர்கள் தரம் 07 மாணவர்களால் இனிப்பு வழங்கி வரவேற்கப்பட்டனர். இதன்போது அதிதிகளாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எம்.சித்தி பாத்திமா, உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்டீன் ஆகியோர் கலந்து கொண்டனர். பாடசாலை பிரதி அதிபர் எம்.ஏ.கமருன் நிஸா, உதவி அதிபர் எம்.எச்.மஹ்மூத் நஸீம், ஏ.ஜே.எம்.றினீஸ், வலயத்தலைவர் ஏ.ஆர்.எம்.நிஹால் ஆகியோருடன் பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். (எஸ்.அஷ்ரப்கான்)



அம்பாறை மாவட்டத்தில் தற்போது சிறுபோக நெற்செய்கைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கிணங்க வயல் நிலங்கள் பண்படுத்தப்படுவதைக் காணலாம். (பொலிவேரியன் செய்தியாளர்)

# பிறை பார்த்தல் தொடர்பான தெளிவூட்டும் மாநாடு நிந்தவூரில்

(எருவில் செய்தியாளர்)

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக் குழு நடத்தும் பிறை மாநாடு கிழக்கிலங்கையின் நிந்தவூரில் நடைபெறவுள்ளது. முஸ்லிம் மக்களின் பிறை பார்த்தல் தொடர்பான பல்வேறு விடயங்களுக்கும் தெளிவூட்டும் வகையிலான இந்த மாநாடு எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

இலங்கை வளிமண்டலவியல் திணைக்களத்தின் சிரேஷ்ட வானிலை அதிகாரியும் கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உறுப்பினருமான கலாநிதி ஏ.எம்.முஹம்மத் சாலிஹீனின் மேற்பார்வையிலும் நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசலின் ஏற்பாட்டிலும் இந்த பிறை மாநாடு நடைபெறவுள்ளது.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் உஸ்தாத் கலீபதுஷ் ஷாதுலி எம்.பீ.எம்.ஹிஷாம் (அல்பத்தாஹி) தலைமையில், நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும் மாநாடு, கலாநிதி சாலிஹீனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும்.

கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழுத் தலைவர் உஸ்தாத் கலிபதுல் ஷாதுலி எம்.பீ.எம்.ஹிஷாம் (அல் பத்தாஹி) தலைமையுரையாற்றுவார். கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிறைக்குழு உப செயலாளர் மௌலவி எம்.ஆர்.அப்துல் ரஹ்மான் (அல் ஹிலாலி) 'பிறையும் வானியலும்' எனும் தலைப்பிலும் கொழும்பு, பிறைக்குழு செயலாளர் உஸ்தாத் ஏ.எல்.எம்.மஸீன் அல் மக்தூமி (அல் ஹஸனீ) 'சர்வதேசப் பிறை' எனும் தலைப்பிலும் கொழும்பு பிறைக்குழு உறுப்பினர் உஸ்தாத் சீ.ஐ.எம்.அஸ்மீர் (அல் ஹஸனீ) 'பிறை விவகாரத்தில் சாட்சியத்தின் வகிபாகம்' எனும் தலைப்பிலும் உரையாற்றவுள்ளனர்.

மாநாட்டின் இறுதியில் நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை செயலாளர் மௌலவி எம்.எம்.கமறுதீன் (ஷர்க்கி) நன்றியுரையாற்றுவதுடன், கொழும்பு பெரிய பள்ளிவாசல் பிரதம கதீப் உஸ்தாத் எஸ்.எம்.எம்.தல்ஹா (அல் பாரி) வின் துஆப் பிரார்த்தனை இடம்பெறும்.



கிழக்கு மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் ஆகியோருக்கான விசேட கூட்டம் திங்கட்கிழமை (08) பிற்பகல் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது, தற்போதைய திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சிறப்புத் திட்டங்கள் பற்றி நீண்ட நேரம் கலந்துரையாடினார். இந்நிகழ்வில் மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பி.எஸ்.ரத்நாயக்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, மாகாண அமைச்சுகளின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் கலந்துகொண்டனர்.
(கிண்ணியா, புளியந்தீவு செய்தியாளர்கள்)

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்ட 74வயது வயோதிபர் உயிரிழப்பு

## கிரான் முறுத்தானையில் சம்பவம்

(வாழைச்சேனை செய்தியாளர்)

கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் முறுத்தானையில் வயோதிபர் ஒருவர் கூரிய ஆயுதத்தினால் தாக்கப்பட்டு சனிக்கிழமை மாலை (06) உயிரிழந்துள்ளதாக வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

சித்தாண்டியைச் சேர்ந்த க.கிருஷ்ணப்பிள்ளை (வயது 74) என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளவராவார்.

சம்பவத்தினத்தன்று பிற்பகல் வேளையில், நாற்பதாவது வில் முறுத்தானையில் உள்ள தமது வயலில் உள்ள வாடியில் அயலவர் ஒருவருடன் பேசிக் கொண்டிருக்கும்போது கத்தியுடன் வந்த ஒருவர் தலையில் வெட்டி காயப்படுத்தி விட்டு, தப்பியோடியுள்ளதாக உயிரிழந்தவரின் மகன் தெரிவித்தார்.

இவ்வாறு காயமடைந்தவரை சிகிச்சைக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில், சந்தேக நபரை பொதுமக்கள் பிடித்து வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் அவர் தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் தெரிவித்தனர்.

சந்தேக நபர் நாளாந்தம் உயிரிழந்த வயோதிபரின் வயல் காணிக்குள் அத்துமீறி சென்று அங்குள்ள பயன் தரும் மரங்களில் உள்ள காய் கனிகளை களவாடுவதும் அவற்றுக்கு சேதம் விளைவிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதையும் கண்டு குறித்த வயோதிபர் அவ்வாறு செய்ய வேண்டாம் எனக் கூறியதனால் இருவருக்குமிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கொலை சம்பவத்தில் முடிந்துள்ளதாக பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு நேரடியாக சென்ற வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி எம்.எச்.எம்.றம்சீன் ஸ்தல விசாரணைகளை மேற்கொண்டதுடன் சட்ட வைத்தியரின் பிரேத பரிசோதனை அறிக்கைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறும் பொலிஸாருக்கு கட்டளையிட்டார். மாவட்ட குற்ற தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

# விறகு தொழிலாளர்களுடன் இம்ரான் எம்.பி. கலந்துரையாடல்



(கந்தளாய் செய்தியாளர்)

திருகோணமலை, கந்தளாய் பிரதேசத்தில் விறகுத் தொழிலில் ஈடுபடுவோருக்கும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூபுக்கும் இடையிலான சந்திப்பு திங்கட்கிழமை(08) கந்தளாய் இரண்டாம் கொலனி முஹைதீன் ஜும்ஆப் பள்ளிவாசல் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

விறகுத் தொழிலை ஜீவனோபாயத் தொழிலாக மேற்கொண்டு வரும் நாம் அத்தொழிலை இடையூறுகளின்றி முன்னெடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினரிடம் அவர்கள் கேட்டுக் கொண்டனர்.

தொழிலாளர்களின் பிரச்சினைகளை செவிமடுத்த பாராளுமன்ற உறுப்பினர் மாவட்டத்துக்குப் பொறுப்பான பொலிஸ் உயரதிகாரியிடம் கலந்துரையாடி தீர்வு பெற்றுத் தருவதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் பேராறு மேற்கு, பேராறு கிழக்கு, பேராற்றுவெளி மற்றும் 2ஆம் கொலனி கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த விறகுத் தொழிலில் ஈடுபடுவோர், பள்ளிவாசல் நிர்வாகத்தினர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் என பலரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



தமிழர் பிரச்சன தீர பாரதத்திட ஆதரவு தேவ என கூட்டமைப்பு தலைவர் சம்மந்தரு சொல்லி இருக்காரு எலுவா? போனவருஷம் பாரத பிரதமர் கூப்பிட்டபோது போகாம சுருட்டித்து படுத்துப்போட்டு இப்ப இத கதச்சி என்ன லாபம் ஐயா! 87ஆம் ஆண்டு செய்த இலங்க இந்திய ஒப்பந்தத்தில உள்ளதையே தட்டிக்கழித்த சிங்கள தலைவர்கள தட்டிக்கேட்க வக்கில்லாத பாரதநாட்டு பிரதமர் எப்படிடாப்பா தமிழர் பிரச்சனய தீர்கிற!

# சமூகப் பங்குபற்றுதல் ஊடான நிலைமாற்ற செயற்றிட்டம்



(மட்டக்களப்பு செய்தியாளர்)

சமூகப் பங்குபற்றுதல் ஊடாக நிலைமாற்றமும் செயற்படுத்தலும் திட்டம் அமுலாவதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில் பெற்றோரையும் பிள்ளைகளையும் உள்ளடக்கி ஒருங்கிணைந்த வகையில் இச்செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக அவர் மேலும் கூறினார்.

வவுணதீவு பிரதேச சபை கேட்போர் கூடத்தில் திங்கட்கிழமை (08) இடம்பெற்ற விழிப்புணர்வு கலந்துரையாடல் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட இளவயதினரின் பெற்றோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வை ஆரம்பித்து வைத்து பெற்றோர் மத்தியில் தெளிவுபடுத்திய யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அனுலா, இள வயதினர் மத்தியில் நெறிப்படுத்தல் மிக அவசியமாக உள்ளது. அதன் காரணமாக இளம் பராயத்தினருக்கு வேறாகவும் பெற்றோருக்கு வேறாகவும் என்றில்லாமல் பெற்றோரையும் பிள்ளைகளையும் ஒருங்கிணைத்த வேலைத்திட்டமாக இது அமைந்துள்ளது. இவ்வேலைத்திட்டத்தின் கீழ் தன்னைத்தானே அறிந்து கொள்ளும் சுய விழிப்புணர்வு, தலைமைத்துவம், இடர்முகாமைத்துவம், மீள் உற்பத்தி சுகாதாரம், சிறுவர் உரிமையும் பாதுகாப்பும் உள்ளிட்ட விடயங்களை வாழ்க்கைப் படிநிலை 3 செயற்றிட்டத்தின் கீழ் பரீட்சார்த்தமாக அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, பெற்றோர் இத்தகைய அரிய உதவு ஊக்க செயற்றிட்டங்களில் சிறந்த முறையில் முழுமையாகப் பங்குபற்றி இதன் உயரிய பயன்களை அடைந்து கொள்ள வேண்டும் என்றார்.



கல்முனைக்குடி 1ஆம் பிரிவு ஜீ.எஸ். ஒழுங்கையில் ஞாயிற்றுக்கிழமை இரவு காட்டு யானைகளினால் வீட்டுச்சுவர் உட்பட மரங்கள் சேதமாக்கப்பட்டுள்ளதை காணலாம்.
(மாவடிப்பள்ளி செய்தியாளர்)

# அனுமதிப்பத்திரமின்றி மதுபானம் விற்பனை

## பெரியநீலாவணையில் ஒருவர் கைது



(பாறுக் ஷிஹான்)

அனுமதிப்பத்திரமின்றி அதிகளவான மதுபான போத்தல்களை சட்டவிரோதமாக கொண்டு சென்று விற்பனை செய்த சந்தேக நபரை பெரியநீலாவணை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை, பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(07) மாலை அதிகளவான பியர் மற்றும் மதுபான போத்தல்கள் சட்டவிரோதமாக அனுமதிப்பத்திரமின்றி விற்பனையில் ஈடுபடுவது தொடர்பில் கிடைக்கப்பெற்ற தகவல் ஒன்றுக்கமைய, பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பெருங்குற்றப்பிரிவு பொறுப்பதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான டி.டினேஸ் தலைமையிலான குற்றத் தடுப்புப்பிரிவினர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டு சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

இதன்போது, சுமார் 37 வயது மதிக்கத்தக்க துறைநீலாவணைப் பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர் மதுபான போத்தல்கள் மற்றும் பியர் ஒரு தொகுதி ஆகியன சூட்சுமமாக மறைத்து விற்பனையில் ஈடுபட்ட நிலையில், மாறுவேடத்தில் சென்ற பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

கைதான நபரிடமிருந்து மீட்கப்பட்ட மதுபான போத்தல்கள் சுமார் பல இலட்சம் ரூபா பெறுமதியானவை எனவும் இவர் அளவுக்கு அதிகமான மதுபான போத்தல்களை தம்வசம் வைத்திருந்தமை மற்றும் உரிய அனுமதியின்றி சட்டவிரோதமாக பதுக்கி விற்பனை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் மேற்படி சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



திருகோணமலையில் சிறுவர்களுக்கான "Marine Mile Challenge" எனும் தலைப்பில் நீச்சல் போட்டி ஞாயிற்றுக்கிழமை(07) நடத்தப்பட்டது. திருகோணமலை கோணேஸ்வரம் கோவிலிலிருந்து சல்லி அம்மன் கோவில் வரையிலான 8 கிலோமீற்றர் தூரத்தை நீந்திக் கடக்கும் முயற்சியில் இப்போட்டி நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் Tinco Aid சார்பில் பணிப்பாளர் தயாளினி ஹரிகரன், நிறுவுநர் இராஜக்கோன் ஹரிகரன், நிகழ்ச்சி முகாமையாளர் சங்கரலிங்கம் நவநீதன் ஆகியோரும் நந்தன விஜயலால் (Yana Foundation Director), பயிற்சியாளர்கள், Trinco Blue Water Sports, பெற்றோர், தன்னார்வலர்கள், படகு உதவியாளர், கிராம மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(கிண்ணியா செய்தியாளர், அப்துல்சலாம் யாசீம்)

# சமூக ஊடகப் பயனர்களுக்கான செயலமர்வு



(மட்டக்களப்பு செய்தியாளர்)

நாடளாவிய ரீதியில் சமூக கலந்துரையாடல்களை உருவாக்கும் நோக்கில் ஊடகவியலாளர்களுக்கும் சமூக ஊடக பயனர்களுக்கும் தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான செயலமர்வு கள் இடம்பெற்று வருவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளரும் சட்டத்தரணியுமான லயனல் குருகே தெரிவித்தார்.

இதனடிப்படையில் நாடளாவிய ரீதியில் ஏற்கெனவே தெரிவு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப்பட்ட தமிழ் மற்றும் சிங்கள மொழிமூலமான சுமார் 130 சமூக ஊடகப் பயனர்களுக்கு மாவட்ட அளவிலான சமூக ஊடக ஒன்றியத்தை உருவாக்குவதற்கான பயிற்சி செயலமர்வுகள் வெள்ளிக்கிழமை (05) தொடக்கம் செவ்வாய்க்கிழமை (09) வரை ஹபரணையில் இடம்பெற்றது.

இது தொடர்பான பயிற்சிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய சட்டத்தரணி லயனல் குருகே, மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அரசாட்சி மற்றும் மோதல் தீர்வு அதனுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துகிறது.

சிறந்த அரசியல் கலாசாரம் மற்றும் விழுமியம் மிக்க சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்காக பொதுமக்களுடன் சம்பந்தப்படுகின்ற கொள்கைகளை விமர்சன ரீதியாக புலனாய்வு செய்கின்ற மாற்றுத் தெரிவுகளை இனங்கண்டு அவற்றை விஸ்தரிக்கும் ஆய்வு அழுத்தங்களைப் பிரயோகிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்க நாம் காத்திரமாக செயற்பட்டு வருகிறோம்.

அதனடிப்படையில் விளக்கமுடைய ஆற்றுப்படுத்தல், அழுத்தம் தெரிவித்தலை வலுப்படுத்துதல் மற்றும் நாட்டில் சகவாழ்வு மேம்பாட்டுக்கான சிவில் வாய்ப்பை உருவாக்குவதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் செயல்படுத்தும் செயற்றிட்டத்தின் இரண்டாவது படிமுறையாக மாவட்ட அளவிலான சமூக ஊடக ஒன்றியம் ஒன்றினை உருவாக்குவது தொடர்பான செயலமர்வு இடம்பெற்றது.

இச்செயலமர்வின்போது இடம்பெறுகின்ற "மாவட்ட அளவிலான சமூக ஊடக ஒன்றியத்தை" உருவாக்கும் திட்டமானது நாட்டு மக்களை பாதிக்கும் பல்வேறு பிரச்சினைகளை கண்டறிந்து அவை தொடர்பாக சமூக கலந்துரையாடல்களை உருவாக்குதல் தொடர்பானதாகும். இச் செயற்பாட்டுடன் தொடர்புடைய வகையிலான தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகள் இச்செயலமர்வின்போது வழங்கப்பட்டன. ஒருங்கிணைந்த ஊடகப் பயிற்சிகளோடு யூரியூப், முகநூல் உள்ளிட்ட ஏனைய ஒலி, ஒளி, அச்சு - இலத்திரனியல் ஊடகங்களையும் சமூக ஊடகங்களையும் பயன்படுத்துவது காணொளிகளைப் பதிவிடுவது உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்பட்டன.

உலக செய்திகள்

# மன்னர் மூன்றாம் சார்ள்ஸின் அதிகாரபூர்வ உருவப்படம் வெளியீடு



பிரித்தானிய மன்னராக மூன்றாம் சார்ள்ஸுக்கு கடந்த 6ஆம் திகதி முறைப்படி முடிசூட்டப்பட்ட நிலையில், மன்னரின் முதல் அதிகாரபூர்வ உருவப்படத்தை பெக்கிங்ஹாம் அரண்மனை வெளியிட்டுள்ளது.

மொத்தம் 4 புகைப்படங்கள் வெளியிடப்பட்டுள்ள நிலையில், தனி உருவப்படத்துக்காக, பெக்கிங்ஹாம் அரண்மனையிலுள்ள சிம்மாசன அறையில் முழு அலங்காரத்தில், இம்பீரியல் ஸ்டேட் கிரீடத்தை மன்னர் சார்ள்ஸ் அணிந்துள்ளார். சிலுவையுடன் கூடிய இறையாண்மை உருண்டை மற்றும் செங்கோலை கைகளில் பிடித்துள்ளார்.

குயின் மேரியின் கிரீடம் மற்றும் எஸ்டேட் ரொப் அணிந்த ராணி கமிலாவின் தனி உருவப்படமும் மன்னரும் ராணியும் இருக்கும் புகைப்படமும் சிம்மாசன அறையில் பணிபுரியும் அரச குடும்ப உறுப்பினர்களுடன் மன்னர் மற்றும் ராணி இருக்கும் குழுப்புகைப்படமும் வெளியிடப்பட்டுள்ளது.

# இம்ரான்கான் கைது; பாகிஸ்தானில் பரபரப்பு





பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் (வயது 70) அந்நாட்டு ரேஞ்சர்ஸ் படையினரால் நேற்று (09) கைது செய்யப்பட்டுள்ளார். அதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இம்ரான்கான் ஆட்சியில் இருந்த காலத்தில் சொத்து அதிகம் சேர்த்தது மற்றும்



ஊழல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில், சில வழக்கு தொடர்பாக இஸ்லாமாபாத் உயர்நீதிமன்றத்தில் ஆஜராக வந்துள்ளார். இதன்போது நீதிமன்றத்துக்கு வெளியே அவரை பாகிஸ்தான் ரேஞ்சர்ஸ் படையினர் கைது செய்தனர். இதன்போது வழக்கறிஞர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் அவரது வழக்கறிஞர் காயத்துக்குள்ளாகியுள்ளார்.

பாகிஸ்தான் இராணுவத்தை விமர்சித்து பேசிய விவகாரத்தில் இம்ரான்கான் கைது செய்யப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இம்ரான் கானின் அரசு, கடந்த 2022ஆம் ஆண்டு கவிழ்ந்தது. அதன்பின்னர் இம்ரான் கானுக்கு எதிராக 100இற்கும் மேற்பட்ட வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. பிரதமராக இருந்தபோது ஊழல் செய்தார், அரசு கருவூல நிதியை தவறாக பயன்படுத்தினார், வெளிநாட்டு உளவு அமைப்புகளுடன் தொடர்பு உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் இம்ரான்கான் மீது சுமத்தப்பட்டது. வழக்கு விசாரணைகளின் போது நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்றால் பிணையை இரத்துச் செய்துவிடுவோம் என ஏற்கனவே நீதிமன்றம் இம்ரான் கானுக்கு தெரிவித்திருந்தது. அதன் அடிப்படையில் இம்ரான்கான் பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்தில் நேற்று (09) ஆஜராகியிருந்தார்.

இந்நிலையில், அவர் இஸ்லாமாபாத் உயர்நீதிமன்ற வளாகத்தில் வைத்து கைது செய்யப்பட்டார். பாகிஸ்தான் பிரதமராக இருந்தபோது, அந்நாட்டு இராணுவத்தை கடுமையாக விமர்சித்திருந்தார். இம்ரான் கானின் கைதால் பாகிஸ்தானில் பரபரப்பான சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் இம்ரான்கான் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்துள்ளன.



கைதான இம்ரான்கானை இஸ்தான்புல் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்காக பலத்த பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டபோது...

இம்ரான்கானின் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி ஆதரவாளர்கள் கராச்சி, லாகூர் மற்றும் பெஷாவர் உள்ளிட்ட பிரதான நகரங்களில் பாரிய ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்துள்ளனர்.

இந்நிலையில் கராச்சியில் போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் கண்ணீர்ப் புகை குண்டுகளை வீசியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இழுபறியில் சூடான் அமைதி பேச்சுவார்த்தை



சூடான் உள்நாட்டுப்போர் இன்று 26ஆவது நாளாகவும் தொடரும் நிலையில் அமெரிக்கா மற்றும் சவூதி அரேபியா மேற்கொண்ட இராஜ தந்திர முயற்சிகளுக்குப் பின்னர் இரு தரப்பினருக்கும் இடையே அமைதிப் பேச்சுவார்த்தை சவூதி அரேபியாவின் ஜித்தா நகரில் இடம்பெற்று வருகிறது.

மோதலில் ஈடுபட்டுவரும் அந்நாட்டு இராணுவம் மற்றும் துணை இராணுவப் படை பிரதிநிதிகள் இடையே இடம்பெற்று வரும் இப்பேச்சுவார்த்தையில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாமல் இழுபறி நீடித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இஸ்ரேஸ் ரொக்கெட் தாக்குதல்: காஸாவில் 13 பேர் உயிரிழப்பு



இஸ்ரேலிய வான்படை நடத்திய ரொக்கெட் தாக்குதலில் பலஸ்தீனைச் சேர்ந்த இஸ்லாமிக் ஜிஹாத் இயக்கத்தின் 3 முக்கிய தளபதிகள் மற்றும் நான்கு குழந்தைகள் உட்பட 13 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 20இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இதனால் இஸ்ரேலிய பலஸ்தீன எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த வாரம் இஸ்ரேலிய சிறையில் பலஸ்தீன போராளியொருவர் உயிரிழந்தார். இதனைத் தொடர்ந்து காஸா எல்லையில் ஆயுதம் தாங்கிய குழுக்கள் தாக்குதலை தொடர்ந்தனர். இச்சூழலில் நேற்று அதிகாலை இஸ்ரேல் வான்படை 3 தளபதிகளை கொன்றிருப்பது பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. கடந்த ஜனவரி முதல் தற்போது வரை 90 பலஸ்தீனர்களும் 10 இஸ்ரேலியர்களும் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஈரானில் 2 வாரங்களில் 42 பேருக்கு தூக்கு



ஈரானில் கடந்த இரண்டு வாரங்களில் 42 கைதிகள் தூக்கிலிடப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் குழுவொன்று தெரிவித்துள்ளது.

குறித்த மனித உரிமைகள் அமைப்பு வெளியிட்ட அறிக்கையில், ''ஈரான் அரசு இந்தாண்டில் மட்டும் இதுவரை 194 பேரை தூக்கிலிட்டு கொன்றுள்ளது. கடந்த இரண்டு வாரங்களில் மட்டும் 42 கைதிகள் தூக்கிலிடப்பட்டுள்ள நிலையில் இவர்களில் பெரும்பாலானோர் போதைப்பொருள் குற்றச்சாட்டின் கீழ் தண்டனை பெற்றவர்கள். கடந்த 10 நாட்களில் மட்டும் சராசரியாக ஒவ்வொரு 6 மணி நேரத்துக்கு ஒருவர் தூக்கிலிடப்பட்டுள்ளார்'' எனத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கடந்த 2022ஆம் ஆண்டு 582 கைதிகளும் 2021ஆம் ஆண்டு 333 கைதிகளும் தூக்கிலிடப்பட்டதாக ஐ.எச்.ஆர் தெரிவித்துள்ளது.

# விளையாட்டுத்துறையின் அதிஉயர் விருதை வென்ற மெஸ்ஸி



விளையாட்டுத்துறையின் அதிஉயர் விருதாகக் கருதப்படும் லோரியஸ் விருதை ஆர்ஜென்டீன உதைபந்து வீரர் லயனல் மெஸி வென்றுள்ளார்.

2023 லோரியஸ் விருது வழங்கல் விழா பிரான்ஸின் பாரிஸ் நகரில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போது ஆண்கள் பிரிவில் லயனல் மெஸி விருது வென்றார். 2022 உலகக்கிண்ண உதைபந்தாட்டத்தில் மெஸி தலைமையிலான ஆர்ஜென்டீன அணி சம்பியனாகிய நிலையில் அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

அதேவேளை சிறந்த அணிக்கான விருதை ஆர்ஜென்டீன ஆண்கள் கால்பந்தாட்ட அணி வென்றது. இதன்மூலம் இவ்வருடம் இரு விருதுகள் மெஸிக்கு கிடைத்துள்ளன. ஒரே வருடத்தில் சிறந்த வீரர் மற்றும் சிறந்த அணிக்கான லோரியஸ் விருதுகளை வென்ற உலகின் முதல் வீரர் லயனல் மெஸி ஆவார்.

35 வயதான மெஸி இரண்டாவது தடவையாக லோரியஸ் விருதை வென்றுள்ளார். 2020 ஆம் ஆண்டு பிரித்தானிய காரோட்ட வீரர் லூயிஸ் ஹமில்டனுடன் இணைந்து இவ்விருதை மெஸி வென்றிருந்தார்.

இம்முறை பெண்கள் பிரிவில் லோரியஸ் விருதை ஜமெய்க்கா குறுந்தூர ஓட்ட வீராங்கனை ஷெல்லி ஆன் பிரேஸர் பிரைஸ் வென்றார். இவர் கடந்த வருடம் 5 ஆவது தடவையாக 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சம்பியன் பட்டத்தை வென்றமை குறிப்பிடத்தக்கது.

மாற்றுத் திறனாளிகளுக்கான விருதை சுவிட்ஸர்லாந்தின் பரா ஓட்ட வீராங்கனை கெத்தரின் டெப்ரன்னர் வென்றார்.

ஒலிம்பிக் ப்ரீ ஸ்டைல் பனிச்சறுக்கல் சம்பியனான சீன - அமெரிக்க வீராங்கனை எய்லீன் கு உலக அக்ஷன் லோரியஸ் விருதை வென்றார்.

TATA IPL

இன்றைய போட்டி

போட்டி இல - 55
சென்னை எதிர் டெல்லி
நேரம் - இரவு 7.30
இடம் - சென்னை

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

# கொழும்பு லீக் 15 வயதுக்குட்பட்ட கடினபந்து அணிக்கு தெரிவான சீனன்கோட்டை ஹிஷாம்



(பேருவளை செய்தியாளர்)

பேருவளை, சீனன்கோட்டை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை மாணவன் ருஸ்லான் ஹிஷாம், கொழும்பு லீக் 15 வயதுக்குட்பட்ட கடினபந்து கிரிக்கெட் அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் பல நாட்களாக இடம்பெற்ற தெரிவுச் சுற்றுப் போட்டிகளில் கலந்து கொண்ட மாணவர்களுள் திறமையின் அடிப்படையில் ருஸ்லான் ஹிஷாம் உட்பட 13 கிரிக்கெட் விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டனர். களுத்துறை மாவட்டத்தில் தெரிவான ஒரே முஸ்லிம் பாடசாலை அல் ஹூமைஸரா தேசிய பாடசாலை என்பதையும் தெரிவு செய்யப்பட்ட ஒரே முஸ்லிம் மாணவன் ருஸ்லான் ஹிஷாம் என்பதும் குறிப்பிடத்தக்கது. தற்போது இவரின் பயிற்சியாளராக முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணி வீரர் ரொமேஷ் ரத்நாயக்க செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அழுத ரசிகனுக்கு சட்டையை கழற்றிக் கொடுத்து ஆறுதல்படுத்திய உதைபந்து வீரர்



உணர்ச்சிவசப்பட்டு அழுத ரசிகனுக்கு சட்டையை கழற்றி கொடுத்து ஆறுதல்படுத்திய இளம் நட்சத்திர வீரர் டெக்லான் ரைஸின் வீடியோ இணையத்தளங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது.

24 வயதாகும் டெக்லான் ரைஸ் வெஸ்ட் ஹாம் அணிக்காக 229 போட்டிகளில் விளையாடி இதுவரை 12 கோல்களை அடித்து அசத்தி இருக்கிறார். இவர் விளையாட்டை அபாரமாகப் புரிந்துகொண்டு 2 கால்களிலும் பந்தைப் பிடிக்கும் திறன் கொண்டவர். டெக்லான் ரைஸ் மிட்ஃபீல்டர் இங்கிலாந்தின் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கினார்.

இந்நிலையில் சமூகவலைத்தளங்களில் ஒரு வீடியோ வைரலாகி வருகிறது. அந்த வீடியோவில் ரைஸ் நடந்து வந்து கொண்டிருந்தபோது ரசிகனான ஒரு சிறுவன் அவரைப் பார்த்ததும் உணர்ச்சி வசப்பட்டு அழுதான். இதைப் பார்த்ததும் ரைஸ் உடனே அச்சிறுவனிடம் சென்று அவனை கட்டியணைத்து ஆறுதல்படுத்தினார். பிறகு தான் அணிந்திருந்த சட்டையை கழற்றி அச்சிறுவனுக்கு பரிசாக கொடுத்து அச்சிறுவனை அன்போடு கட்டியணைத்தார்.

# டோனி இன்னும் ஒரு வருடம் விளையாடுவார்

## தன்னிடம் கூறியதாக ரெய்னா தெரிவிப்பு

நடப்பு ஐ.பி.எல் தொடரை வென்ற பிறகு மேலும் ஒரு வருடம் டோனி விளையாடுவார் என்று சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார். நடப்பு ஐ.பி.எல். சீசனுடன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் கேப்டன் டோனி ஓய்வு பெற உள்ளதாக சொல்லப்பட்டு வருகிறது. இந்த சூழலில் டோனியின் ஐ.பி.எல். கிரிக்கெட் ஓய்வு சார்ந்த திட்டம் என்ன? என்பது குறித்து சுரேஷ் ரெய்னா தகவல் ஒன்றை பகிர்ந்துள்ளார். ஐ.பி.எல். கோப்பையை வென்ற பிறகு மேலும் ஒரு வருடம் விளையாடுவேன் என டோனி தன்னிடம் தெரிவித்ததாக ரெய்னா தெரிவித்துள்ளார். அண்மையில் டோனியை சந்தித்தபோது அவர் தன்னிடம் இதை பகிர்ந்து கொண்டதாக ரெய்னா தெரிவித்துள்ளார். டோனியின் இந்த வார்த்தைகள் சென்னை அணிக்காக 5ஆவது முறையாக ஐ.பி.எல். கோப்பையை வெல்லும் முடிவோடு அவர் இயங்கி வருவதை தெளிவாக வெளிப்படுத்துகிறது.அண்மையில் லக்னோ அணிக்கு எதிரான லீக் போட்டியின் போது இது எனது கடைசி ஐ.பி.எல். சீசன் என நான் சொல்லவில்லை என வர்ணனையாளரிடம் டோனி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெற்றிக் கிண்ணத்தைச் சுவீகரித்தது துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகம்

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)



மத்திய விளையாட்டுக் கழகத்தின் 13ஆவது ஆண்டு நிறைவை சிறப்பிக்கும் முகமாக ஆர்.ஜே. மீடியாவின் ஊடக அனுசரணையுடன் ஒழுங்குபடுத்தப்பட்ட 32 அணிகள் பங்குபற்றிய மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வு நேற்றுமுன்தினம் நாவிதன்வெளி 15ஆம் கிராம பாமடி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் கலந்து சிறப்பித்தார். இறுதிச் சுற்றுப் போட்டியில் துறைநீலாவணை மத்திய விளையாட்டுக் கழகத்தினர் சம்பியன் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர். மற்றும் பட்டிருப்பு வுளூ டயமண்ட் விளையாட்டுக் கழகத்தினர் ரன்னர்-அப் பட்டத்தையும் நற்பிட்டிமுனை வாரணம் விளையாட்டுக் கழகத்தினர் இரண்டாவது ரன்னர்-அப் பட்டத்தையும் சூடிக்கொண்டனர். இந்நிகழ்வின் போது வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7